www.tamilarangam.net

# நண்பன்

கிறிஸ்மஸ் இதழ் ஒரு பிரெஞ்சு பிரசுரம். 1994

பிரான்சிலிருந்து வெளிவரும்
சுதந்திர சமத்துவ மனிதாபிமான அறிவியல் கலை
பகுத்தறிவு இறை நம்பிக்கை இதழ்.

## பிரெஞ்சு நாட்டு அதிபர் தேர்தல் ஒரு ஆய்வு!

## சிராக்கின் அதிர்ஷ்டம் எதுவரை?

## கிறிஸ்மஸ் கட்டுரைகள் — கி.கிறிஸ்ரியன்

இந்தியாவில் ஏன் தகராறு ?

– சக்திப்புயல்

குட்டி மதங்களும் குற்றவாளிகளும்

– மைசாச மன்றாடி

வாசகர் வட்டம்
உரையாடல் பகுதி

இன்னும் சில.......

கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சுபறீனா இன்ரநெஷனல்

75, RUE LOUIS BLANC
75010 PARIS

TEL: 42 09 96 96
FAX: 42 05 85 40

Mo: LA CHAPELLE /GARE DU NORD

## குறுகிய காலத்தில் பெரும் புகழ் பெற்ற இரு நிறுவனங்கள்

21, RUE CAIL
75010 PARIS

TEL: 42 05 05 68

Mo: LA CHAPELLE /GARE DU NORD

# சுபறீனா உணவகம்

www.tamilarangam.net

# உங்களுடன்..................

சுமார் 5 ஆண்டு இடைவெளிக்குப் பின் மீண்டும் நண்பன் வருகிறது. இந்த இதழில் நோக்கங்களையும், திட்டங்களையும் சொல்லி அறுப்பது சரியில்லை. நான்காம் இதழ் வரும்போது (?) பார்க்கலாம். அது வருவதும், வளர்வதும் வாசகர்களின் ஒத்துழைப்பை பொறுத்தது. இருந்தாலும் இதழின் நோக்கம் சுருக்கமாக அட்டையில் கூறப்பட்டுள்ளது. இது கல்வி, அறிவு, சமூக முன்னேற்த்தில் அதிக கவனம் செலுத்தும்.

வளர்ந்துவிட்ட பல சமுதாயங்களுக்கு மத்தியில் தமிழன் இன்று மெதுவாக வளர்ந்துவரும் ஒரு சமூகம். இந்த வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் மது, மாது. சூது, சினிமா, புகழ், மூட நம்பிக்கைகள் போன்றவைகளில் தமிழன் சிக்கியிருப்பது வருந்தத்தக்கது. அதனால் தமிழ் இன வளர்ச்சிக்காக அவர்களின் சுதந்திர உரிமைக்காக பாடுபட்டுவரும் விடுதலைப்புலிகளின் சில முக்கிய கட்டுப்பாடுகளோடு நான் உடன்பட்டிருக்கிறேன்.

அதே போன்று திராவிடர் கழகத் தலைவரோடும் உடன்பட்டிருக்கிறேன். தெளிவாக இறை நம்பிக்கை உடையவனாக நான் இருந்தும் கூட நபிகள் நாயகம் (சல்) அவர்களின் விழாவிற்கென்று பேசும் நான் மற்றவர்களின் திருமண விழாவிலே. கலாச்சார விழாவிலே பங்குகொண்டு பேசுவதும் உண்டு.

சில அடிப்படை விஷயங்களில் வேறுபட்டிருந்தாலும், பல விஷயங்களில் ஒன்றுபட்டு இருப்பதும், அதனை ஒருமுகப்படுத்தி செயல்படுத்துவதும் சிறப்பிற்குரிய விஷயங்கள். எனவே, தமிழன் தனது அறிவை, ஆற்றலை, சிறந்த முறையில் பயன்படுத்தி செயல்பட்டு மிக வேகமாக முன்னேற வேண்டும் என்பதே எனது விருப்பம். அந்த அடிப்படையில் நண்பன் ஒரு சிறு முயற்சி.

எனவே சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அது கசப்பாக இருந்தாலும் சரி, பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். திறந்த மனத்தோடு விரிந்த கலைகளை கற்க வேண்டும். நன்மாராயங்கள் நிலவட்டுமாக!

பாரிஸ் — அன்பன்
டிசம்பர் 1994 — நண்பன்

வீடு வாடகைக்குப் பெற,
மணமக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய
வாகன ஒழுங்குகள் மற்றும் பல சேவைகளுக்கு

VASAN JEWELS

23, rue Phillipe de Girard, 75010 Paris
Tel: 40 35 41 81
Mo: La Chapelle ou Stalingrad

www.tamilarangam.net

# இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏன் தகராறு

– சக்திப்புயல் பிரசங்கம்

**(1994–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் தேதி பொந்த்வாஸ் (PONTOISE) ஊரில் நடைபெற்ற நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பிறந்தநாள் விழாவில் பேராசிரியரின் பிரசங்க சாரம் (ஆ–ர்)**

எந்த காலத்திற்கும் ஏற்ற இனிமையான சட்டங்களை அளித்தது இஸ்லாம். சகோதரத்துவத்தை, மனிதாபிமானத்தை தனது வாழ்க்கையில் செயல்படுத்திக்காட்டுகிறது இந்த சமூகம். இந்தியாவில் முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் ஏன் சண்டை ஏற்படுகிறது?

10000 ஆண்டுகளுக்கும் மேலாக இந்து சமயம் இந்தியாவில் இருக்கிறது. மற்ற எந்த சமயத்தினருக்கும், இந்துக்களுக்கும் மத்தியில் சண்டை இல்லை.

நல்ல சிந்தனை, நல்ல செயல், நல்ல எண்ணம் இவைகளைப் போதித்த புத்த பெருமானையே விரட்டி அடித்துவிட்டார்கள்.

உருவ வழிபாடு இல்லை என்று கூறிய வள்ளலாருக்கும் பின்னர் உருவம் அமைக்கப்பட்டது. பாண்டிச்சேரியில் நல்லதை கூறிய அரவிந்தரின் மறைவுக்குப் பின்னால் அவரது உருவப்படம் வீடுகளில் அலங்காரத்திற்கு வைக்கப்படுகின்றன. ஆனால் அவர் போதித்த நல்ல தத்துவம் மறைந்துவிட்டது.

அதே போன்று இறைவனையே மறுக்கும் நாஸ்திகர்களுக்கும் இந்துக்களுக்கும் மத்தியில் பிரச்னை இல்லை. ஏன் பின்னர் வந்த கிறிஸ்தவர்களாலும் அந்தப் பிரச்னை ஏற்படவில்லை. ஏனென்று சொன்னால், இந்தியாவிற்கு கிறிஸ்து மதத்தை பிரச்சாரம் செய்ய வந்தவர்கள் ஒன்றைப் புரிந்து கொண்டார்கள். இந்த மண்ணில் ஜாதி வித்தியாசம் பார்க்கவில்லை எனில் நமது காரியம் எடுபடாது என்பதைப் புரிந்துகொண்டு கிறிஸ்தவ சமயத்திலேயே ஜாதியை அமுல்படுத்தினார்கள். எனவே தான் பிராமண கிறிஸ்தவர், நாடார் கிறிஸ்தவர், பிள்ளை கிறிஸ்தவர், முதலியார் கிறிஸ்தவர், ஹரிஜன் கிறிஸ்தவர் என்ற பிரிவுகள் ஏற்பட்டன.

இது எந்த அளவுக்கு பின்பற்றப்படுகிறது என்றால், நாடார் கிறிஸ்தவர் தனது மகளை நாடார் இந்துவுக்கு மணம் முடித்துக் கொடுப்பார். ஆனால் ஹரிஜன கிறிஸ்தவருக்கு கொடுக்க மாட்டார். ஆனால் இஸ்லாம் மட்டும் தனது உறுதியான கொள்கையினால் ஜாதி வேறுபாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தக் காரணத்தினாலேயே இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. இந்துக்கள் என்றால் மேல் மட்டத்தில் உள்ளவர்களைக் குறிப்பிடுகின்றேன். பிரம்மாவின் நெற்றியிலிருந்து பிராமணன் பிறந்தான். மார்பிலிருந்து சத்திரியன் பிறந்தான். வயிற்றிலிருந்து வைசியன் பிறந்தான், காலிலிருந்து சூத்திரன் பிறந்தான் என்று பிறப்பால் பேதத்தை ஏற்படுத்திய பிராமணர்களைக் குறிப்பிடுகிறேன். ஆனால் இஸ்லாம் இந்த கொள்கைகளுக்கு வளைந்து கொடுக்கவில்லை.

நபிகள் நாயகத்தின் தத்துவம் இன்றும் இருக்கிறது. அவர்களின் உருவப்படம் இல்லை. அவர்களின் போதனை முன்னிடம் வகிக்கிறது. அதனால்தான் நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலைகி சவல்லம் அவர்களின் பிறந்தநாள் விழாவையே கொண்டாடக்கூடாது என்று கூறும் சகோதரர்களின் எண்ணத்தை நான் புரிந்துகொள்கிறேன். உண்மையில் நாம் எடுக்கும் இந்த விழா அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த எடுக்கும் விழா என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## நிறைவு நினைவு பிறந்தநாள் விழா

நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலைகி வசல்லம் அவர்களின் நிறைவு நினைவு பிறந்தநாள் விழா பாரிஸ் மாநகர அர்ச்சனா கலையரங்கத்தில் 18.12.94 ஞாயிறன்று நடைபெற்றது. விழாத் தலைவர் நண்பன் முகம்மது சலாஹுத்தீன் பட்டி மன்ற நடுவராகவும் பங்கு பெற்றார்.

நபிகள் நாயகம் தலை சிறந்த சமயத் தலைவர் என்ற அணியின் கீழ் பேராசிரியர் சக்திப் புயல், ஜமால் முகம்மது, முகம்மது தாவூது எம்.ஏ. ஆகியோரும், தலைசிறந்த சமுதாயத் தலைவர் என்ற அணியின் கீழ் கவிஞர் கி.கிறிஸ்ரியன், கோவை நந்தன், முகம்மது தாஜுத்தின் ஆகியோரும் பங்குகொண்டனர்.

நபிகள் நாயகம் தலைசிறந்த சமயத்தலைவர் என தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஹாஜி முகம்மது அலி பி.ஏ. சிறப்புரை ஆற்றினார். பசீர் அகம்மது நன்றியுரை நிகழ்த்தினார்.

www.tamilarangam.net

# பிரெஞ்சு நாட்டின் அதிபர் தேர்தல்

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற இருக்கிறது. ஆளும் கூட்டணி கட்சியின் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கனவு காணத்துவங்கி காரியத்தில் இறங்கியும் உள்ளனர். இத்தலைவர்கள் தங்களது யுகதிகள் சாம, பேத தான தண்டங்கள் அந்தர் பப்டிகள் என பலவித செயல்பாடுகளை வெளிப்படுத்துகின்றனர்.

ஒன்றுமட்டும் நிச்சயம். பெரியப்பா தொந்தோன் (TONTON) என அழைக்கப்படும் அதிபர் மித்திரன் நினைப்பதுநடக்கிறது. எனக்குப் பின் பிரளயம் தான் என்று அவர் ஊகிப்பது போல் நடக்கும் நிகழ்ச்சிகள் தென்படுகின்றன.ஜாக் சிராக்கின் தலைமையிலான ஏர்.பி.ஏர் (R P R) கட்சி செங்குத்தாக பிளவு அடைகிறது நன்றி விசுவாசம் என்பது அரசியலில் கிடையாது என்பதற்கு இலக்கணம் வகிக்கிறார் இன்றைய முதல் மந்திரி பலாதுார். இரண்டு முறை அதிபர் பதவிக்குப் போட்டியிட்டுத்தோல்வி அடைந்த ஷிராக் மீண்டும் தன் கட்சியின் வேட்பாளராக விரும்புவது இயற்கை. அவர் அக்கட்சியின் தலைவரும் கூட. அதன் அடிப்படையில் தனது கட்சித் தலைமையை இப்போது இராஜினமா செய்துவிட்டார். அக்கட்சியின் உட் சட்டப்படி அதிபர் போட்டிக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்பவர் கட்சித்தலைவராக இன்றி சாதாரண கட்சி உறுப்பினராகவே போட்டியிட வேண்டும். ஆனால் அவர் பிடித்து வைத்த பிள்ளையார் பலதுார் தனது பிரதமர் பதவி மூலம் கிடைத்த செல்வாக்கு மற்றும் மீடியாக்களின் மிகைபடுத்தப்பட்ட ராட்சத புள்ளி விபரங்களால் கிடைத்த பாட்புலாரிட்டி அடிப்படையில் தான்தான் அடுத்த குடியரசுத் தலைவர் என்ற அழுத்தத்துடன் செயற்படுகிறார்.

ஷிராக்கின் அதிர்ஷ்டம் பாரீசின் நகரசபையோடு முடிவடையும் என்றே தோன்றுகின்றது. எட்டப்பன் அதிகமாக இருக்கும் போது எந்த கட்டப்பொம்மனுக்கும் வெற்றி இல்லை என்பதே விதி. பஸ்குவா, சேகன் போன்றவர்கள் அவரவர் கணக்கை ஷிராக்கிடம் நேரம் பார்த்துத் தீர்த்துக் கொள்கிறார்கள் வெளியுறவு அமைச்சர் அலென் ஜூப்பே மட்டும் தான் தன்னை நன்றியுள்ளவர் என்று காட்டுகிறார். தற்போதைய தற்காலிக கட்சித்தலைவர் இவரே.

பெரும்பான்மை கட்சியின் பங்குதாரர்களான யூடி.எப் (UDF) கட்சியில் எவருக்கும் தேர்தலில் நிற்க பயம் ஆனால் அவர்களில் ஷார்ல் மியயோன் என்பவருக்கு மட்டும் குளத்தில் கல்லெறிந்து அலை உண்டாக்க விருப்பம்.

சுகாதார அமைச்சரான சிமோன் வேய் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பாதுகப்பு அமைச்சர் லியோத்தார் போன்றவர்கள் ஏற்கனவே பலாதுாருக்குப் பல்லக்கு தூக்க ஆயத்தமாக இருக்கிறார்கள்.

கூட்டணி அரசியல் அதிக உறுப்பினர்களைக் கொண்டது ஏர்பி.ஏர் கட்சி அதில் ஷிராக் கோஷ்டி,பலதூர் கோஷ்டி என்று பிளவுபடும் போது கிட்டத்தட்ட பெரும்பான்மை கட்சியே பிளவுபடுவது போல தோன்றினும் இந்த நாட்டின் முதலாளித்துவம் எவருக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்று பார்த்தால் அது பலாதுாருக்குத்தான். ஷிராக்கை ஓரங்கட்டுவது என்று முடிவு எடுத்து விட்டார்கள் என்றே தோன்றுகிறது இந்த நிலையில் அரசியல் விதவையாக ஒதுங்கி இருந்த சோஷலிஸ்டுகள் புனர் வாழ்வை அமைக்க கனவு காண்கிறார்கள். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்த சோஷலிஸ்டுகள் தங்கள் முன்னாள் பிரதமர் பியர் பெரகோவ்வாவை தற்கொலை மூலம் இழந்தார்கள். பிரெஞ்சு வரலாற்றிலேயே ஒரு சாமானியன் பிரதமரானது மட்டுமல்ல, உறுதியான பிராங்கு மதிப்பை நிலை நிறுத்திய மந்திரியும் அவர்தான். அப்படிப்பட்டவரின் மரணத்திற்குப் பின் சோஷலிஸ்ட் கட்சியில் யாருக்கும் அதிபராவதற்கு தகுதி இருப்பதாக தோன்றாத சூழ்நிலை ஏற்பட்டது.

## பைசாச மன்றாடி

மிஷல் ரோக்கார் சில அதிரடி பிக் பாங் (BIG BANG) நடவடிக்கை மூலம் தலைமைப் பதவியைக் கைப்பற்றினார். சோஷலிச கட்சியின் இயற்கையான வேட்பாளர் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டார். ஆனால் பெர்னார்ட்தப்பி போன்ற இடதுசாரி நபர்களின் நட்பை உதாசீனப்படுத்தியதும், தனது கட்சியிலேயே விரோதிகளை உருவாக்கிக் கொண்டதும் அவருடைய கனவுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டன. கடந்த ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தலில் சோஷலிச ஆட்சி மீண்டும் படுதோல்வி அடைந்தது. ரோக்கார் தலைமைப் பதவியிலிருந்து கழட்டிக் கொள்ள வேண்டி இருந்தது. அடுத்த சோஷலிசக் கட்சியின் பெரிய தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய நிலையில் யாரும் இல்லை .

லோரான் ஃபபியூஸ் ஏற்கனவே பிரதமராக இருந்தாலும் மாசுபட்ட இரத்தம் சம்பந்தப்பட்ட தாவாவில் பொதுப் பொறுப்பு சாட்டப்பட்ட அவர் பெயர் இழுக்கப்பட்டு அவரது செல்வாக்கு பாதிக்கப்பட்டது.

பியர் மொருவா ஏற்கனவே பிரதமராக இருந்தாலும் மித்திரன் என்ற ஆலமரத்தின் கீழே உருவான புல்லைப்போல வாடிய எதிர் காலத்தையே நோக்க வேண்டி இருந்தது. தற்போது பொதுச் செயலாளராக் இருக்கின்ற எமானுவல்லி நீதித்துறை சம்பந்தப் பட்ட சில பிரச்சினைகனில் இழுக்கடிக்கப்பட்டவர். ஜான் பியர் ஷெவன்மான் மனச்சாட்சி உள்ளவர். யதார்த்தவாதி. எனவே வெகுசன விரோதியாக்கப்பட்டு பதவியை இராஜினாமா செய்ய நேர்ந்தது. அவர் சோஷலிச கட்சி மீதே வெறுப்புற்று வெளியேறியும் விட்டார்.

தற்போது மிச்சமிருப்பவர்களில் முக்கியமானவர் ஜாக் தொலோர் தான். யார் இந்த ஜாக் தொலோர்? இவர்

www.tamilarangam.net

தான் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் முன்னாள் பிரெஞ்சு நிதி மந்திரி அத்துறையில் பெருவா அளவுக்குத் திறமையானவரா என்பது கேள்விக்குறிதான். இப்போது கடும் போட்டி பலதூருக்கும் தொலோருக்கும் தான். இதில் போட்டியிட வேண்டும் என்றாலே சோஷலிசக் கட்சி சில நிபந்தனைக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற தோரணையில் பேசிவருகிறார். தனது வேட்பை பற்றியே அவ்வப்போது தயக்கம் காட்டுகிறார். தன்னை விட்டால் சோஷலிசக் கட்சிக்கு வேறு கதியில்லை என்ற நினைப்பு. இது மித்திரான் உடைய தவறான அணுகுமுறையினால் எற்பட்ட விளைவு.

எந்த ஒரு தலைவனும் தனக்குப் பின் கட்சியை திறமையாக நடத்திச்செல்ல முன் கூட்டி திட்டமிட்டே ஒரு தலைமைப் பின்னணியை உருவாக்க வேண்டும். மித்தரன் தனக்குப் பின்னணியில் குழப்பம் இருந்தால் தான் தானே நிரந்தர தலைமையில் இருக்க முடியும் என்ற கருத்தில் செயற்பட்டவர். அந்த இராஜதந்திரத்தை பயன்படுத்தித்தான் அவர் தமது இரண்டாவது குடியரசுத் தலைமை காலத்தை ஏழாண்டு நீட்டிக் கொண்டார். அதன் விளைவு சோஷலிச கட்சி இன்று தொலோர் வீட்டு வாசலில் தவம் கிடக்கிறது.

தொலோர் இடதுசாரி லேபிள் ஒட்டப்பட்ட மிதவாதியே அன்றி ஒரு முற்போக்கு இடதுசாரி அல்ல. தவிரவும் அமெரிக்கப் புலியைப் பார்த்து முதுகில் சூடு போட்டுக் கொள்ளும் ஐக்கிய ஐரோப்பிய பூனையின் அதிகார வர்க்கத்தின் சாரம் ஊறிய அம்பு முனை. ஐரோப்பிய யூனியன் எவ்வளவு பற்றாக்குறையில் இயங்குகிறது என்று தற்போது குற்றச்சாட்டுகள் அதிகரித்துள்ளன. பொதுவாக இவரிடம் இடதுசாரி முற்போக்குத் திட்டங்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால் இவர் பேசும்போது சில சமூகநல மேம்பாட்டுத் திட்டங்கள் தன் கைவசம் இருப்பதாக பூச்சாண்டி காட்டுகிறார். ஆள் குறைப்புத் திட்டங்களில் முதலாளித்துவத்திற்கு துணைபுரிவதில் பலதூருக்கு இவர் ஒன்றும் குறைந்தவர் அல்ல.

> பலதூரின் தனியாருடைமையாக்கும் திட்டங்கள், ஆள் குறைப்பு அங்கீகாரங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியாகவே மிதவாதி தொலமேர் உடைய அரசியலும் இருக்கும். எனவே தனது இடதுசாரி கொள்கையை நிலை நிறுத்தக் கூடிய தலைமையின்றி சோஷலிசக் கட்சி வெத்துவேட்டாக ஆகிவிட்டது.

பொதுவுடமைக் கட்சியோ சோவியத் நாடு சிதைவுற்று ரஷ்யா அமெரிக்காவின் ஹம்பேர்கர்களுக்கு (Hamburger) கையேந்தத் தொடங்கிய பின் தமது முக்கியத்துவத்தை பிரான்சிலும் இழந்துவிட்டது. இது சோசலிசக் கட்சியுடன் அமைக்கும் கூட்டணி மிகச் சந்தர்ப்பவாதக் கூட்டாகவே காட்சி அளிக்கிறது. ஒரு மிதவாத நாடான பிரான்சில் பொதுவுடமை கட்சி தனது 12 வீத இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதே பெரும்பாடுதான்.

அடுத்து லூபென்னின் தீவிர வலதுசாரி கட்சி. வலதுசாரி கூட்டணி அரசின் மூன்று மந்திரிகள் ஊழல் தொடர்பால் பதவி இழந்த நிலையில் லூபென் கட்சி தன்னை அப்பழுக்கற்ற கரங்களைக் கொண்டது என்று காட்டிக்கொண்டு தனித்தன்மை, தனிமனித ஒழுக்கம், கலாச்சாரம், பாதுகாப்பு, வெள்ளை மக்களுக்கு முன்னுரிமை, மண்ணின் மைந்தர்களுக்கு வேலையுரிமை போன்ற வாக்குறுதிகளை முன்வைத்து போட்டிபோடுகிறது. மக்கள் இன்றைய கூட்டணி ஆட்சியின் உள்பூசல்கள், ஊழல்களை முன்னிட்டு வெறுப்படைந்திருக்கும்போது தனது மூலதனமாக்க கருதுவது இயற்கையானதே.

அடுத்து பேர்னாட் தப்பி என்ற உதிரி இடதுசாரி பிரெஞ்சு அரசியலை புட்பால் கிரவுண்டாக பாவிக்க தனது செல்வாக்கைப் பயன்படுத்துகிறார். இவருக்கு வர்த்தக ரீதியான அல்லது அரசியல் பொருளாதார சித்தாந்த ரீதியான அரசியல் செய்ய விருப்பமில்லை. நாளைக்கே குடியரசுத் தேர்தலை எந்த வேட்பாளரின் அணி புட்பாலில் ஜெயிக்கிறதோ அந்த அணியின் வேட்பாளர் தான் குடியரசுத் தலைவர். இதே போல பிலிப் தெவில்லியே என்ற வலதுசாரி மித தேசியவாதி பெரும்பான்மைக் கூட்டணியில் இருந்தாலும் மாஸ்ட்ரிஜ் மற்றும் காட் ஒப்பந்தத்திற்கு எதிரான தனது நிலையால் ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தலில் ஓரளவு அதிக வாக்குகள் பெற்றார். ஊழலற்ற ஆட்சி பிரான்சின் தனித்துவம் போன்ற அறிவுப்பக்களில் இவர் லூபென்னின் தோட்டத்தில் எல்லை மீறி மேயும் பசுமாடு போன்றவர்.

ஆக மொத்தத்தில் பிரான்சில் தற்போது ஏற்பட்டுவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்து மக்களுக்கு நிரந்தரமான, உத்தரவாதமான வேலை வாய்ப்பு, கல்வி வசதி, சமூகப் பாதுகாப்பு, வீட்டுவசதி ஆகியவற்றை உறுதியாக வழங்க இவர்களில் எவரும் உத்தரவாதம் கொடுக்கவில்லை என்பதே உண்மை.

மாறாக, ஆள் குறைப்புத் திட்டம், சமூகக் காப்புறுதித் திட்டத்தில் கெடுபிடி (Securite Sociale, Allocation Familiale) குடியேறும் மக்களுக்கு எதிரான நடவடிக்கை தனியாருடைமையாக்குதல், முழுநேரவேலை முறையை குறைத்து பகுதிநேர வேலைகளை பரவலாக உருவாக்கி முதலாளித்துவத்தின் கரங்களைப் பலப்படுத்துதல் என்ற நிலையில் இவர்கள் அனைவரும் சளைத்தவர்கள் அல்ல என்றே நிரூபிக்கப் பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் ஐந்து வருடம் வேலைசெய்து தற்போது வேலையின்றி (Chomage) இருக்கும் சராசரி பிரெஞ்சுக்காரன் யாரைத் தேர்ந்தெடுப்பான்? என்று கேட்பதைவிட அவனுக்கு அதனால் என்ன இலாபம் என்பதே நமது கேள்வி. எனவேதான் இந்த தேர்தலை மக்கள் ஒரு ஏமாற்ற உணர்வுடன் எதிர்கொள்கிறார்கள்.

ஒன்று மட்டும் நிச்சயம். இந்த வேட்பாளர்களில் எவர் ஜெயித்தாலும் உழைக்கும் வர்க்கத்திற்கு சாதகமாக அதிகமான சலுகைகள், வீட்டுவசதி போன்றவை கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.

www.tamilarangam.net

# கிளிண்டனுக்கு விழுந்த அடி

அமெரிக்க அதிபராக கிளிண்டன் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நாட்களில் எவ்வளவு எதிர்பார்ப்புகள் ஆரவாரங்கள் பெருமிதங்கள் எல்லாம் இப்போது தகர்ந்துவிட்டன அடுத்த அதிபர் தேர்தலுக்கு இன்னும் பாதி வழி மீதி இருக்கும்போதே அவரது ஜனநாயகக் கட்சி தோல்வியைத் தழுவிவிட்டது.

செனட்டுக்கும் பிரதிநிதிகள் சபைக்கும் நடந்த தேர்தலில் எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி பெரும்பான்மை பெற்றுவிட்டது.

கிளிண்டனுடைய ஜனநாயகக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும் தாராளவாதக் கொள்கையின் பிரசார பீரங்கியுமான மரியோ கோமோ நியூயார்க் ஆளுநருக்கான தேர்தலில் படு தோல்வி அடைந்திருக்கிறார். அடுத்தடுத்து மூன்று முறை ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் இப்போது தோற்றிருப்பது சாதாரண விஷயமல்ல. ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த எட்வர்ட் கென்னடி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது உண்மைதான் குடியரசு கட்சியைச் சேர்ந்த – ஈரான் ஆயுத ஊழலில் சம்பந்தப்பட்ட – ஆலிவர் நார்த் தோற்றிருப்பதும் உண்மைதான்.

எனினும் ஜனநாயகக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும் குடியரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள எழுச்சியும் வரவிருக்கும் அதிபர் தேர்தலை எந்தவிதத்திலும் பாதிக்கப் போவதில்லை. உள்நாட்டுப் பிரச்சனைகளை முன்வைத்து அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற கிளிண்டன் இந்தத் தேர்தலில் வெளிநாட்டுப் பிரச்சனைகளில் தான் தமது சாதனைகளை முழக்கமிட முடிந்தது என்பது வரலாற்றின் விசித்திரம்.

பாலஸ்தீன– இஸ்ரேல் உடன்பாடு, வடகொரியாவின் அணுஆயுத அபாயத்தைக் கட்டுப்படுத்துவது குவைத்துக்கு மீண்டும் பாதுகாப்பு சதாமுக்கு எதிர்ப்பு ஹைதியில் ஜனநாயகம் என்றெல்லாம் சர்வதேசப் பிரச்சினைகளில் தனது சாதனைகளைத் தான் கிளிண்டனால் பட்டியலிட முடிந்தது.

உள்நாட்டிலோ அதிபர் தேர்தலின்போது பெரிதும் டமாரம் அடிக்கப்பட்ட சுகாதாரம், வரி, குடும்ப நலம், குற்றத்தடுப்பு ஆகிய அனைத்துத் துறைகளிலும் கிளிண்டன் அரசு தோல்வி அடைந்திருப்பதாகவே அமெரிக்க மக்கள் கருதுகிறார்கள் இதைத்தான் இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன

இனி கிளிண்டனின் ஒவ்வொரு நடவடிக்கையும் எதிர்க்கட்சியினர் நிறைந்த பிரதிநிதிகள் சபையிலும் செனட்டிலும் கட:டுப்படுத்தப்படும் வரும் 1996–ம் ஆண்டில் அதிபர் தேர்தலில் கிளிண்டனின் ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றி பெறுவது மலையைப் புரட்டும் வேலையாகவே இருக்கும் அதற்கான புதிய வழிமுறைகளை கிளிண்டன் கண்டுபிடிக்க வேண்டியதும் கடைபிடிக்க வேண்டியதும் தவிர்க்க முடியாதது.

– நன்றி தினமணி

## பேராசிரியர் எஸ். சச்சிதானந்தம்.

பிரெஞ்சு நாட்டில் இலங்கைத் தமிழரில் முதன் முதலாக பிரெஞ்சு மொழி கல்விக்கூடம் நிறுவியவர் பேராசிரியர் அவர்கள்.
எழுத்துத் துறையில் அதி விரைவிலேயே இந்திய, இலங்கைத் தமிழர்களிலேயே மொழியியல் துறையில் முதன்மையிடத்துக்கு வரவிருக்கிறார். அவருடைய வெளிவராத புதிய நூல்

## GRAMMAIRE FRANCAISE
## பிரெஞ்சு இலக்கணம்

பிரெஞ்சு வாழ் தமிழ் மக்கள் அனைவருடைய வீட்டிலும் கண்டிப்பாக இருக்கவேண்டிய ஒரு பொக்கிஷம்.
அதிலிருந்து சில பகுதிகளை ஆசிரியரின் அனுமதியோடு இந்த இதழின் வேறுபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் மனதில் மாவீரர் நாள்

## செய்தி விமர்சனம்

அந்நிய தேசத்தில் குடியேறி அமைதியுடன், வசதிகளுடன் வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்கள் தங்கள் மண்ணையோ, அந்த மண்ணிற்காக போராடிய வீரர்களையோ, தங்களது தனிதேச இலட்சியத்திற்காக உயிர் துறந்த மாவீரர்களையோ மறந்தவர்களாக வாழவில்லை. தங்கள் வாழ்வோடும், நினைவோடும் மாவீரர்களை நினைவில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதை நவம்பர் 27ம் தேதி பாரிஸ் மாநகரில் 'ட்ரியானோ' மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர் தினத்தன்று திரண்டிருந்த மக்கள் உணர்த்திக்காட்டினர்.

மாவீரர்கள் நினைவாக மேடையில் அமைக்கப்பட்டிருந்த நினைவு தூபிக்கு மக்கள் மலர் அஞ்சலி செலுத்திக்கொண்டனர். பின்னர் தமிழ் வணக்கப்பாடல் ஆரம்பமாகி, தொடர்ந்து நடனம், நாடகம் என பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சிகளில் மக்கள் தங்களை ஒன்றவைத்துக் கொண்டனர். பாடல்கள், நடனங்கள் எல்லாம் ஈழ மண்ணின் அவலை நிலைகளை தெளிவாக எடுத்துக்கூறின.

இறுதியாக இடம்பெற்ற நாடகத்தை நாடகம் பார்த்தோம் என்ற திருப்திக்கு உள்ளாக்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. தமிழீழ மண்ணின் தனிப்பெரும் கவிஞர் முருகையன் எழுதிய நாடகம் இன்றைய யதார்த்தபூர்வ நிகழ்வை துல்லியமாக விளக்கியது. நாடகத்தில் பங்கேற்ற அனைவரும் தமது பாத்திரங்களை உணர்ந்து நடித்தனர். நெறியாளர் இந்நாடகத்தை சிறந்த முறையில் நெறியாண்டிருந்தார். பின்னணியில் ஒலித்த குரல்கூட நாடகத்திற்கேற்ப உணர்வலைகளைத் தவழவிட்டன.

விழாவின் கருப்பொருளான மாவீரர்களை என்றும் நினைவில் நிற்கவைக்கும் வண்ணம் வெளியடப்பட்ட மலர், மாவீரர்களின் இலட்சியத்தை பசுமையாக பதிய வைக்கும் வண்ணம் ஆங்காங்கே மாணிக்க வரிகளில் இரத்தினச் சுருக்கமாக பதிக்கப்பட்டிருந்தது. சான்றுக்கு

**'செந்தமிழீழத் திசைகள் யாவும் சிவக்கும்**
**இந்துமா கடலில் இன்னொரு நாடு பிறக்கும்!**
ஒன்று போதும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் மாவீரர்கள் மறக்க முடியாதவர்கள். ஏன்? நாளைய தமிழீழ மண்ணின் தேசிய வீரர்கள். களத்திலே நிற்கும் வீரர்கள். தங்கள் தலைவனின் பணிப்பை எவ்வளவு சிரத்தையோடு நிறைவேற்றிக் கொள்கிறார்கள் என்பது உலகறிந்த ஒன்று. உலகிலேயே தலைசிறந்த கொரில்லாப் படையாகத் திகழும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இலட்சியத்திற்காக நடத்தும் தர்மயுத்தம் நிச்சயம் தர்மத்தையும், நீதியையும் நிலைநாட்டும் என்பதில் சந்தேகமில்லை.

**ராஜ் – நண்பன்.**

# கிசு கிசு.............

## காதில் விழுந்த கிசு கிசு

கண்ணியமானவர், சட்டவிதிகளை மதிப்பவர், அமைதியானவர், அலுவலகம் அவரது தகுதியை விட சிறியதாக இருப்பதால் பெரிதாக தேடிக்கொண்டிருக்கிறார். கணக்கில் கணக்காக இருக்கும் அவருக்கு கிடைக்காமலா போகும்?

சுதந்திரமான நிர்வாகி, இரண்டு அறைகளை வாடகைக்கு விட ஆட்களை தேடிக்கொண்டிருக்கிறார். வாடகை என்னவோ 4 ஆயிரமாம். நிபந்தனை என்னவோ Non சமயல், Non குடும்பம், Oui, Oui ஆபிஸ்.

நடமாடும் மருத்துவர், இயற்கையை நேசிப்பவர், ஒரு அலுவலகம் தேடுகிறார். லா சப்பல் பகுதிகளில் 1500 பிராங் கட்ட தயார். அட்வான்ஸ் பத்தாயிரம் வரை தருவதற்கு ரெடியாம்.

தமிழக 'நாடகக் காவலர்' பெயரை உடையவர், கம்பியூட்டரில் புலி, மூன்று இடம் பார்த்துவிட்டார். விரைவில் ஒன்றில் வரப்போவது அவரது பிரோ.

மசாலா தோசைக்கு மாவாட்டிக்கொண்டிருந்த முதலாளிக்கு புதிதாக இதுவரை எந்தத் தமிழனும் செய்யாத ஒரு தொழிற்துறையில் தொழிற்சாலை திறப்பதற்கு ரொம்பவும் ஆசை. ஆசையிருக்கிறது. அதிர்ஷ்டம் இருக்குமா?

தமிழ் உணவகங்களின், பத்திரிக்கைகளின் வெற்றியினால் பலர் அந்த முயற்சியில் முயன்றுகொண்டிருக்கிறார்கள். லா சப்பலில் மட்டும் 3 இடங்களில் தேடப்பட்டது என்னவோ உண்மை! (இதனால் லாபம் அரசுக்குத்தான்.)

தங்கமயமான நிறுவனத்தின் முதலாளி சர்வதேச மட்டத்தில் புதிய புரட்சிகரமான முறையில் புதுத் தொழிலை ஆரம்பிக்க பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார். தொழிலுக்கான பங்காளர் தனது மூளையை மட்டும் தருவேன் லாபத்தில் பத்துவீதம் தான் கொடுப்பேன் என்று பிடிவாதம் செய்ய இந்த புதுக்கடையின் புது முதலாளி அனைத்திற்கும் நானே முதலீடு செய்கிறேன் 25 வீதமாவது கருணை காட்டுங்கள் என்று கேட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார். திட்டமும் தயார். அதற்கான நட்புறவு ஒப்பந்தமும் தயார். திட்டம் ஐந்தாண்டு காலத் திட்டமா? என்பது போகப் போகத்தான் தெரியும்.

**உங்களுக்குத் தெரிந்த கி.கி.யை ஆதாரத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

www.tamilarangam.net

# குட்டி மதங்களும் குற்றங்களும்

– பைசாச மன்றாடி

**தமிழகத்தில் கைதான பிரேமானந்தா சாமியாருடைய சம்பவம் நடைபெற்ற இச்சமயத்தில் பொருத்தமாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

அண்மையில் பிரான்சின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள காஸ்தெலான் எல்ற குன்றுச் சரிவு நகரத்தில் உள்ள 'மந்தாரம் சாம்பகசாலம்' என்ற ஆசிரமத்தை விசாரிக்க நீதிபதியும், ஆயுதப் படைப் பிரிவும் சென்றன. நகர கட்டிட விதிமுறைகளை மீறி, காட்டுத்தனமாக சில கோபுரங்களை எழுப்ப விரும்புவதாக ஜில்பேர் பூர்தன் என்ற குட்டி மதத் தலைவர் மீது புகார் வந்திருந்தது. இந்த குட்டிச் சமயத்தின் பெயர் பொற்றாமரை குதிரை வீரர்கள் (CHEVALIER DU LOTUS D'OR) ஆகும். இக்குழுவில் மத்திய விஞ்ஞான ஆராய்ச்சி மையத்தில் வேலை பார்க்கும் ஒரு பெண் விஞ்ஞானியும் உறுப்பினராக இருக்கிறார்.

இது தவிர 'பலான வேலைகள், சில்லுண்டிகள், மூளைச்சலவை போன்ற சிறிய சமயத்திற்கே உரிய குற்றங்களும், வரி ஏய்ப்புக்களும் நடப்பதாகவும் புகார் வந்தது.

உலகம் முழுவதும் இதுபோல பல குட்டிச் சமயங்கள் காளான்களைப்போன்று உருவாகி, பெருகி வருகிறது.

சுவிஸ் ,கனடா நாடுகளில் சூரியக் கோயில் வகையறா (ORDRE DU TEMPLE SOLAIE) என்ற சின்ன சமயம் இருந்தது ஒரு மாதத்திற்கு முன்பு இதனுடைய சுமார் ஐம்பது உறுப்பினர்கள் தங்களின் மண்டபத்தை தீக்கிரையாக்கி கொண்டு தற்கொலை செய்து கொண்டனர்.

சென்ற ஆண்டு அமெரிக்காவில் தன்னை ஏசுவின் அவதாரம் என்று கூறிக் கொண்ட இளைஞர் ஒருவரின் சமயக் குழு தனக்கென ஒரு பாசறை அமைத்துக் கொண்டு அமெரிக்க இராணுவத்தையே சந்தித்து எரிந்து சாம்பலாயிற்று.

இருபது வருடத்திற்கு முன் பிரிட்டிசஷ்கயானா வில் ஜீம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயில் (Peoples Temple) என்ற சமயக்குழு தனது தலைவர் உட்பட சுமார் முன்நூறு பேருடன் சயனைட் விஷம் குடித்து மாண்டனர்.

சிறிய சமயக்குழுக்கள் இந்தியாவிலும் தனது சில்லறைத்தனங்களை தொடர்ந்து வருகின்றன. இந்தியாவில் அவசர நிலையின் போது ஆனந்த மார்க்கம் என்ற சமயக் குழுவும் தமிழ் நாட்டில் மெய்வழிச்சாலை என்ற ஆசிரமும் தடை செய்யப்பட்டது அவர்களது ஆசிரமங்களில் ஏராளமான ஆயுதங்கள், பணங்கள்,மண்டை ஓடுகள் கைப்பற்றப்பட்டன. இந்தியாவை சேர்ந்த மகரிஷி ரஜனீஷ் தனது ஆசிரமத்தில் வெளிநாட்டவரை கொண்டு செக்சை தண்ணீராக்கி அட்டூழியம் பண்ணினார் புகார் வந்து அரசு அவ்விவகாரத்தில் மூக்கை நுழைந்தது விளைவு சாமியார் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரி ஒகியோவில் குடியேறினார் இந்த பொருளாதார குற்றவாளிக்கு அரசியல்தஞ்சம் அளிப்பதன் மூலம் என்னமோ சிறு சமய சாமியார்களுடைய உரிமைகளை இந்திய அரசு சர்வாதிகாரமாகப் பறித்து துன்புறுத்துகிறது என்ற ஒரு இமேஜை உருவாக்கியது. இது நடந்த பத்து பதினைந்து வருடங்களுக்குள் இந்தக் கில்லாடி சாமியார் அமெரிக்காவில் ஒரு ஊரையே விலைக்கு வாங்கி விட்டார்.

**குட்டி சமயங்களின்குட்டிச் சாத்தான் வேலைகள்.**
**ரஜனீஷ் சாமியாரின் கில்லாடி சாதனைகள்.**
**மூளைச் சலவை முறை.**
**ஏமாறாமல் இருக்கும் முறை.**

அந்த ஆசிரம ஊருக்கு உலகம் முழுவதும் இருந்து ஆஷாடபூதிகள் பெருகி எக்கச்சக்கமாக வருவாய் குவிந்தது. அமெரிக்க வருவாய்துறையை பல மில்லியன் டாலர்களுக்கு ஏய்த்ததுமில்லாமல் புறநகரவாசிகளின் விவகாரங்களில் சட்ட ஒழுங்கீனத்தை எற்படுத்தினார் எனவே இறுதியாக, இந்தியாவிற்கே நாடு கடத்தப்பட்டார். இது போன்ற குழுக்களையும் குறிப்பாக அதன் தலைவர்களையும் பற்றி ஆராயப் போனால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஒரே குணச் சித்திரம் உள்ளவர்களாகவே தோன்றுவர் அதை விட பெரிய வேடிக்கை என்ன வெனில் அவர்களைப் பின்பற்றுபவர்களும் ஒரே மாதிரியான மூளைக்கோளாறு உள்ளவர்களாகவே இருப்பார்கள் சற்று இது பற்றி பார்ப்போம்.

முதலில் தலைவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தார்மீக சட்ட நெறிமுறை என்பது உண்டு. அதற்கு உடன்படாத மனோபோக்கு இவர்களிடம் இருக்கும். தங்களை சமுதாயத்தை அழிவிலிருந்து மீட்க வந்த நேர்வழியாளர்களைப் போல காட்டிக்கொள்வார்கள். இதற்கு பெரும்பாலான அற நெறிகளும், சட்ட அமைப்பும் குறுக்கே இருப்பதாக மெதுவாக உணர்த்துவார்கள். இதன் அடிப்படையில் தம்மை யேசுவைப்போல சிலுவையில் அறையப்போவதாக நம்ப வைக்கும் யுக்தியும் உண்டு.

இதனால் தம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தை ஒரு அரணாக ஏற்படுத்துவர். நாளடைவில் இது ஒரு குட்டி மதமாக உருவாகிவிடும். இவர்களிடம் பரா நோயா என்ற சந்தேக நோய் அறிகுறிகள் இருக்கும். அதாவது யாரையும் எளிதில் நம்பாமை, தான் நினைப்பதுதான் சரி, தமது கருத்தை விமர்சிக்க எவருக்கும் உரிமை இல்லை, தான் கடவுளின் அவதாரம். தன்னை அரசும் பெரும்பான்மை மதவாதிகளும் பலியிடப் போகிறார்கள். அதன்பின் பிரளயமே தோன்றப் போகிறது. உலகம் அளியும் என்ற தம்மை பின்பற்றுபவர்களிடம் வாதித்து உறுதிப்படுத்துவார்கள். இதில் ஆச்சரியமான விசயம் இவர்களின் வாதிடும் திறமைதான்.

நிதானமாக ஆராய்ந்து சிந்திக்கும் மனப்பக்குவம்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குட்டி மதங்களும் குற்றங்களும்

— பைசாச மன்றாடி

தமிழகத்தில் கைதான பிரேமானந்தா சாமியாருடைய சம்பவம் நடைபெற்ற இச்சமயத்தில் பொருத்தமாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

**அண்மையில் பிரான்சின் தென் கிழக்குப் பகுதியில்** உள்ள காஸ்தெலான் என்ற குன்றுச் சரிவு நகரத்தில் உள்ள 'மந்தாரம் சாம்பகசாலம்' என்ற ஆசிரமத்தை விசாரிக்க நீதிபதியும், ஆயுதப் படைப் பிரிவும் சென்றன. நகர கட்டிட விதிமுறைகளை மீறி, காட்டுத்தனமாக சில கோபுரங்களை எழுப்ப விரும்புவதாக ஜில்பேர் பூர்தன் என்ற குட்டி மதத் தலைவர் மீது புகார் வந்திருந்தது. இந்த குட்டிச் சமயத்தின் பெயர் பொற்றாமரை குதிரை வீரர்கள் (CHEVALIER DU LOTUS D'OR) ஆகும். இக்குழுவில் மத்திய விஞ்ஞான ஆராய்ச்சி மையத்தில் வேலை பார்க்கும் ஒரு பெண் விஞ்ஞானியும் உறுப்பினராக இருக்கிறார்.

இது தவிர 'பலான வேலைகள், சில்லுண்டிகள், மூளைச்சலவை போன்ற சிறிய சமயத்திற்கே உரிய குற்றங்களும், வரி ஏய்ப்புக்களும் நடப்பதாகவும் புகார் வந்தது.

உலகம் முழுவதும் இதுபோல பல குட்டிச் சமயங்கள் காளான்களைப்போல்று உருவாகி, பெருகி வருகிறது.

சுவிஸ் ,கனடா நாடுகளில் சூரியக் கோயில் வகையறா (ORDRE DU TEMPLE SOLAIE) என்ற சின்ன சமயம் இருந்தது ஒரு மாதத்திற்கு முன்பு இதனுடைய சுமார் ஐம்பது உறுப்பினர்கள் தங்களின் மண்டபத்தை தீக்கிரையாக்கி கொண்டு தற்கொலை செய்து கொண்டனர்.

சென்ற ஆண்டு அமெரிக்காவில் தன்னை ஏசுவின் அவதாரம் என்று கூறிக் கொண்ட இளைஞர் ஒருவரின் சமயக் குழு தனக்கென ஒரு பாசறை அமைத்துக் கொண்டு அமெரிக்க இராணுவத்தையே சந்தித்து எரிந்து சாம்பலாயிற்று.

இருபது வருடத்திற்கு முன் பிரிட்டிஷ்கயானா வில் ஜீம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயில் (Peoples Temple) என்ற சமயக்குழு தனது தலைவர் உட்பட சுமார் முன்நூறு பேருடன் சயனைட் விஷம் குடித்து மாண்டனர்.

சிறிய சமயக்குழுக்கள் இந்தியாவிலும் தனது சில்லறைத்தனங்களை தொடர்ந்து வருகின்றன. இந்தியாவில் **அவசர நிலையின் போது ஆனந்த மார்க்கம் என்ற சமயக் குழுவும் தமிழ் நாட்டில் மெய்வழிச்சாலை என்ற ஆசிரமும் தடை செய்யப்பட்டது அவர்களது ஆசிரமங்களில் ஏராளமான ஆயுதங்கள், பணங்கள்,மண்டை ஓடுகள் கைப்பற்றப்பட்டன. இந்தியாவை சேர்ந்த மகரிஷி ரஜனீஷ் தனது ஆசிரமத்தில் வெளிநாட்டவரை கொண்டு செக்சை தண்ணீராக்கி அட்டூழியம் பண்ணினார் புகார் வந்து அரசு அவ்விவகாரத்தில் மூக்கை நுழைந்தது விளைவு சாமியார் அமெரிக்காவில்** அரசியல் தஞ்சம் கோரி ஒகியோவில் குடியேறினார் இந்த பொருளாதார குற்றவாளிக்கு அரசியல்தஞ்சம் அளிப்பதன் மூலம் என்னமோ சிறு சமய சாமியார்களுடைய உரிமைகளை இந்திய அரசு சர்வாதிகாரமாகப் பறித்து துன்புறுத்துகிறது என்ற ஒரு இமேஜை உருவாக்கியது. இது நடந்த பத்து பதினைந்து வருடங்களுக்குள் இந்தக் கில்லாடி சாமியார் அமெரிக்காவில் ஒரு ஊரையே விலைக்கு வாங்கி விட்டார்.

**குட்டி சமயங்களின்குட்டிச் சாத்தான் வேலைகள்.**
**ரஜனீஷ் சாமியாரின் கில்லாடி சாதனைகள்.**
**மூளைச் சலவை முறை.**
**ஏமாறாமல் இருக்கும் முறை.**

அந்த ஆசிரம ஊருக்கு உலகம் முழுவதும் இருந்து ஆஷாடபூதிகள் பெருகி எக்கச்சக்கமாக வருவாய் குவிந்தது. அமெரிக்க வருவாய்துறையை பல மில்லியன் டாலர்களுக்கு ஏய்த்ததுமில்லாமல் புறநகரவாசிகளின் விவகாரங்களில் சட்ட ஒழுங்கீனத்தை எற்படுத்தினார் எனவே இறுதியாக, இந்தியாவிற்கே நாடு கடத்தப்பட்டார். இது போன்ற குழுக்களையும் குறிப்பாக அதன் தலைவர்களையும் பற்றி ஆராயப் போனால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஒரே குணச் சித்திரம் உள்ளவர்களாகவே தோன்றுவர் அதை விட பெரிய வேடிக்கை என்ன வெனில் அவர்களைப் பின்பற்றுபவர்களும் ஒரே மாதிரியான மூளைக்கோளாறு உள்ளவர்களாகவே இருப்பார்கள் சற்று இது பற்றி பார்ப்போம்.

முதலில் தலைவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தார்மீக சட்ட நெறிமுறை என்பது உண்டு. அதற்கு உடன்படாத மனோபோக்கு இவர்களிடம் இருக்கும் தங்களை சமுதாயத்தை அழிவிலிருந்து மீட்க வந்த நேர்வழியாளர்களைப் போல காட்டிக்கொள்வார்கள். இதற்கு பெரும்பாலான அற நெறிகளும், சட்ட அமைப்பும் குறுக்கே இருப்பதாக மெதுவாக உணர்த்துவார்கள். இதன் அடிப்படையில் தம்மை யேசுவைப்போல சிலுவையில் அறையப்போவதாக நம்ப வைக்கும் யுக்தியும் உண்டு.

இதனால் தம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தை ஒரு அரணாக ஏற்படுத்துவர். நாளடைவில் இது ஒரு குட்டி மதமாக உருவாகிவிடும். இவர்களிடம் பரா நோயா என்ற சந்தேக நோய் அறிகுறிகள் இருக்கும். அதாவது **யாரையும் எளிதில் நம்பாமை, தான் நினைப்பதுதான் சரி, தமது கருத்தை விமர்சிக்க எவருக்கும் உரிமை இல்லை, தான் கடவுளின் அவதாரம். தன்னை அரசும் பெரும்பான்மை மதவாதிகளும் பலியிடப் போகிறார்கள். அதன்பின் பிரளயமே தோன்றப் போகிறது. உலகம் அளியும் என்ற தம்மை பின்பற்றுபவர்களிடம் வாதித்து உறுதிப்படுத்துவார்கள். இதில் ஆச்சரியமான விசயம் இவர்களின் வாதிடும் திறமைதான்.**

நிதானமாக ஆராய்ந்து சிந்திக்கும் மனப்பக்குவம்

www.tamilarangam.net

அற்றவர்கள் குறிப்பாக அபலைப் பெண்கள், குழந்தைகள் இவர்களின் வாக்கு சாதுரியத்தில் மயங்குவார்கள். இந்த வகையில் தன்னைச் சுற்றி ஒரு ஆட்டு மந்தையையே உருவாக்கி விடுவார்கள். இந்த ஆட்டு மந்தை தமது உடல், புள்ளி, பொருள், ஆவி அனைத்தையும் குழுவுக்காகவும், குறிப்பாக குருவுக்காகவும் அர்ப்பணிக்க தயாராகிவிடும். இந்த மந்தையை பராமரிக்கும் விதம் இந்த குருமார்களுக்கு கைவந்த கலை.

கடவுளின் வடிவம், அவர் கருத்து வேதம், அதற்கு மிஞ்சியது ஒன்றுமில்லை. தமது குருவை விமர்சித்துப் பேசும் எந்த அறிக்கைகையையும் படிக்கவோ, அது பற்றி பேசுவதோ கூடாது. பெரும்பான்மையான மக்கள் அவர்கள் உறவினர்கள், நண்பர்களாக, ஏன் தாய் தந்தையராக இருந்தாலும் சரி, அவர்கள் விசயம் தெரியாதவர்கள். அவர்களிடமிருந்து ஒதுங்கி இருக்கவேண்டும். பிரளயத்தின் போது குழுவும் தாங்களும் மட்டுமே தப்பிப்போம். மற்றவர்கள் மரித்துப் போவார்கள் என்ற கருத்தை தத்துவரூபமாக நம்புவார்கள். தங்களது சொத்துக்களை கண்ணை மூடிக்கொண்டு சமயத்திற்கும், குழுவிற்கும் தானமாக கொடுப்பார்கள். ஆச்சிரம விதிகளை தப்பித் தவறி மீறினால் குரு கொடுக்கும் எந்த தண்டனையையும் மனமுவந்து ஏற்றுக்கொள்வார்கள்.

இந்த வகையில் குழு ஒரு விபரீத பாலியல் கோளாறுடைய வெறியனின் தலைமையில் இருந்துவிட்டால்; ஒருபால் புணர்ச்சி, கூட்டுப் புணர்ச்சி, சிறாார் புணர்ச்சி, முறைகெட்ட புணர்ச்சி என்ற பல தரங்கெட்ட புணர்ச்சி முறைகள் வெறியாட்டம் போட ஆரம்பிக்கும். அதை சுலபமாக்க படிப்படியாக போதை மருந்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டார்கள். இதை வெளியே சொல்பவர்களை கொலை செய்யவும் அஞ்ச மாட்டார்கள்.

ஆசிரமத்துச் சொத்தை தலைவனும், அவனுக்கு நெருக்கமானவர்களும் தனது சொந்தக் கணக்கிலோ பினாமியாகவோ முதலீடு செய்வார்கள். எந்தக் கணத்தில் தான் இருக்கும் நாட்டைவிட்டு தப்பியோடத் தயாராகவே இருப்பார்கள். அப்படி முடியாவிட்டால் குழு உறுப்பினர்களுடன் கூட்டுத் தற்கொலை செய்தல் என்ற அறிவிக்காத ரெடிமேட்டுத் திட்டத்தையும் வைத்திருப்பார்கள்.

குழு உறுப்பினர்களின் குழந்தைகள் இளம்பருவத்திலே மூளைச் சலவை செய்யப்படும். அதாவது குழுவுக்கு அப்பால் இருப்பவர்கள் மிலேச்சர்கள், குழு போதிக்கும் கல்விதான் உயர்ந்தது என்ற பாணியில் தம்மை தத்தம் செய்யும் மனப்பாண்மையில் குழந்தை வளரும்.

இவர்கள் புத்திசாலித் தனமாக கூடுமானவரை அரசுடன் நேரடியாக மோதுவதையோ கண்காணிப்புத் துறையின் கவனத்தில் படுவதையோ தவிர்த்துவிடுவார்கள். கட்டிடம் கட்டுதல், வரி விலக்கு, சில்லறை வசதிகள், விழா எடுத்தல் போன்ற தமக்கு ஆக வேண்டிய காரியங்களை நிறைவேற்ற அரசியல் வாதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் காவல் ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து சாதுரியமாக சாதித்துக்கொள்வார்கள்.

பொதுவாக குரைக்கும் நாய்களை பணக்கட்டால் அடிப்பார்கள். அல்லது மது, மாது, போதைப் பொருள் என்ற ஆயுதத்தை பயன்படுத்துவார்கள். நிலைமை மீறும் போது ஆளை தீர்த்துக் கட்ட திட்டமும் தீட்டுவார்கள். இந்தவகையில் அவசர நிலையின் போது, ஆனந்தமார்க்கிகள் காட்மண்டுவில் நடந்த தமது இரகசிய மாநாட்டில் வெளிநாட்டு உளவுச் சக்திகளுடன் பேரம் பேசியிருந்தார்கள். தக்க நேரத்தில் இந்திய உளவு நிறுவனம் அதை அறிந்து தீவிர நடவடிக்கை மேற்கொண்டது.

பொதுவாக, மக்கள் இதுபோன்ற குட்டிச் சமய குழுக்களுடன் சகவாசம் கொள்வதை தவிர்க்க வேண்டும். குருமார்களை கண்மூடித்தனமாக நம்பக்கூடாது. இறை நம்பிக்கை உள்ளவர்கள் இவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

உலகின் பெரிய சமயங்கள் எல்லாம் பொதுவாக அரசின், சமூகத்தின் சட்ட வரையறைக்குட்பட்டுத்தான் தமது நடவடிக்கைகளை வைத்திருக்கின்றன. பிரான்ஸ், இந்தியா போன்ற மத சார்பற்ற நாட்டில் மக்களின் மத நம்பிக்கைகள் மதிக்கப்படுகின்றன. மனித உரிமைகள் என்றளவில் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் அதே சமயம் எந்த ஒரு மதமும் குடியரசு, மதச்சார்பின்மை, வருமானவரிச் சட்டம், குழந்தைகள் உரிமை ஆகியவற்றுக்கும், சட்ட ஒழுங்குகளுக்கும் ஊறு விளைவித்தாலோ மதத்தின் பெயரால் ஒழுங்கீனங்கள், வரி ஏய்ப்பு, குற்றம், மனித உரிமையை மனோவயப்படுத்தி ஒடுக்குதல், உரிமை மீறல் ஆகியவற்றை மேற்கொண்டால், அது பெரும்பான்மை மதமாக இருந்தாலும், அவை குடியரசின் சட்டப்படி தண்டிக்கப்பட்டே தீரவேண்டும். இல்லாவிட்டால் குட்டிச் சமயங்கள் பேரால் குடியரசுக்ள சிதற ஆரம்பிக்கும். காட்டுமிராண்டித்தனமே மிஞ்சும். அயோக்கியர்களும், விகாரமான விரசமான குணக்கேடு உள்ளவர்களும் கடவுளர்களாகவும், ஆசாட பூதிகளாகவும் ஆகிவிடுவார்கள்.

பொதுவாக, எந்த ஒரு மதக் கொள்கையும் விமர்சன மனப்போக்குடன் ஆராய்ந்து அறிந்து தெளிந்து ஏற்கப்படவேண்டும். திணிக்கப்பட்டதோ, மூளை சலவை செய்யப்பட்டதோ மதமாக முடியாது.

## தரங்கெட்ட கசிப்பு

எதிர் வீட்டில் அவள் வசிப்பு
எழில் கோலமோ பார்வையில் ரசிப்பு
எம்முள்ளே ஏற்பட்டது ஒரு சந்திப்பு
அது காதலாக மாறி ஒன்றிப்பு - ஆனால்
இருவீட்டார் பலத்த எதிர்ப்பு
எமக்குள் போடப்பட்டது ஒரு வேலி தடுப்பு
என் மனதில் ஏற்பட்டது ஒரு கலகலப்பு - ஆனாலும்
தொடர்ந்து மடல்கள் வாசிப்பு
போகப்போகத்தான் புரிந்தது அவளை
பலர் பேர் ருசிப்பு
அன்றிலிருந்து அவள் எனக்கொரு
தரங்கெட்ட கசிப்பு

தெல்லிப்பூர்
இரா. ஜெயக்குமார்

www.tamilarangam.net

# கவனத்திற்கு வந்தவை

கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கும், அண்ணா தி.மு.கழகத்திற்கும் உடன்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லையென்றும், அம்பேத்காரை கர்நாடக முதல்வர் உருவில் பார்ப்பதாக சட்ட மன்றத்திலேயே 'ஐஸ்' வைத்த முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவர் தான் முயற்சித்தார்.

பின்னணி இதுதான். கர்நாடக மாநில துணை முதல்வர் கிருஷ்ணாவும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுந், தமிழக முன்னாள் அமைச்சர் ஜி. விஸ்வநாதனும், நண்பர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த போது ஏற்பட்ட நட்பு. சென்ற மாதம் ஓர் பிரச்னை சம்பந்தமாக இருவரும் பேசிக்கொண்டனர். அப்போது தற்செயலாக அண்ணா தி.மு.க. பற்றி கிருஷ்ணா கேட்க, 'தயவு செய்து தமிழகம் வாருங்கள். இங்கே காங்கிரஸ் படும்பாட்டைக் கண்கூடாகக் காணுங்கள்' என்று விசுவநாதன் அழைப்பு விடுத்தாராம். கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவரோ நானோ உடன்பாட்டை விரும்பவில்லை. வீரப்ப மொய்லிக்குத்தான் சற்று சபலம் உண்டு. அவரும் ஒரே தொகுதியைத்தான் விட்டுக்கொடுப்பார் என்று கிருஷ்ணா சொன்னார்.

இந்தத் தகவல் வாழப்பாடியாருக்கு எட்ட அவரும் பம்பரமாகச் செயல்பட்டார். கோலார் தொகுதியை அண்ணா தி.மு.கழகத்திற்கு விட்டுக் கொடுக்கக்கூடாது. காங்கிரஸ் கட்சி வேட்பாளரை நிறுத்தியே ஆகவேண்டும் என்பது அவரது வாதம். அவரது கருத்து கட்சி தலைமைக்கு எட்டியது. அவருக்கு பிரதமர் அலுவலகத்திலிருந்து அழைப்பு.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்த அண்ணா தி.மு.கழகத் தலைமை தொடர்ந்து முயற்சிக்கும் போது அந்தக் கட்சியின் கர்நாடக காங்கிரசோ ஆந்திர மாநில காங்கிரசோ உடன்பாடு காண முயல்வது புத்திசாலித்தனம் அல்ல என்பதை எடுத்துக் கூறினாராம்.

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல் மேலும் இரண்டு சம்பவங்கள். தனியார் விமானத்தில் பயணம் செய்ய டிக்கட் வாங்கியிருந்த மத்திய அமைச்சர் அருணாசலம் மதுரை விமான நிலையத்தில் இறக்கிவிடப்பட்ட சம்பவம். அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கடிதம் எழுதினால் ஏற்கமாட்டோம். தலைவர் என்ற முறையில் நரசிம்மராவே கடிதம் எழுதினால்தான் காங்கிரஸ் விலக்கிய ஆறு எம்.எல்.ஏக்களுக்கு தனி இடம் ஒதுக்குவர் என்று சட்டமன்றத்தில் சபாநாயகர் அளித்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு. இரண்டு சம்பவங்கள் போதுமா என்று சற்று வாழப்பாடியார் காங்கிரஸ் தலைவருக்கு சுட்டிக்காட்டினாராம்.

அத்தோடு அவர் விடவில்லை. கோலார் தொகுதிக்கு காங்கிரஸ் வேட்பாளரை அறிவியுங்கள் என்பதில் உறுதியாக நின்றார். செல்வராஜ் என்பவருக்கு காங்கிரஸ் டிக்கட் கிடைக்க உறுதுணையாக நின்றதோடு கைச்சின்னம் பெறுவதற்கான சான்றிதழும் அவருக்கே கிடைத்த பின்னர்தான் சென்னை திரும்பினார்.

அவர் டில்லியை விட்டுக் கிளம்பி பம்பாய் வந்து சென்னை வந்து சேரும் வரையிலும் கோலார் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளர் பெயர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அவருக்கே ஆச்சரியம். ஆனால் அடுத்த நாள் அதிகாரபூர்வமான அறிவிப்பு வந்தது. அண்ணா தி.மு.க. உறவு என்பதற்கான கதவுகளும் தற்போதைக்கு அடைக்கப்பட்டன.

கர்நாடக மாநில காங்கிரஸ் வேட்பாளர் தேர்வில் மத்திய அமைச்சர் ஜாபர் ஷெரிபுக்குத்தான் வருத்தம். அவருடைய மருமகனுக்கு மட்டும் தேர்தல் டிக்கட். இரண்டு மகன்களுக்கும் தேர்தல் டிக்கட் இல்லை. இருந்தாலும் இதனைப் பெரிது படுத்தப் போவதில்லை என்று பெருந்தன்மையோடு சொல்லிவிட்டாராம்.

காங்கிரஸ் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் அவருடைய மருமகனுக்கு மட்டும் தேர்தல் டிக்கட்டாம். காங்கிரஸ் தலைமை சொன்ன காரணம் இது.

## சொல்லாதே யாரும் கேட்டால்

சர்வதேசப் புகழ்பெற்ற இந்தியத் தலைவர்களில் மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசுவும் ஒருவர். அவருடைய அரசியல் வரலாறு இந்திய சுதந்திரப் போராட்டத்திலிருந்து ஆரம்பமாகிறது. அவர் சில மாதங்களுக்கு முன்னர் சென்னையில் போயஸ் தோட்டம் போய் தமிழக முதல்வரைச் சந்தித்தார். ஒரு மணி நேரத்திற்கு மேல் அரசியல் கலந்துரையாடல். அதன்பின்னர் மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழக பேச்சாளர்களுக்கு வாய்மொழி உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டதாம். தமிழக முதல்வரைத் தாக்கிப் பேச வேண்டாம் என்பதுதான் அந்த உத்தரவாதம். அதன்பின்னர் தஞ்சை மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சியினர் முன்னணித் தொண்டர்கள் இருவர் படுகொலை. அந்த வாய்மொழி உத்தரவு இன்னும் நீடிக்கிறதா இல்லையா?

## ஆறுதல் பரிசு

கடைசியாகக் கிடைத்த தகவல். கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லியும் அண்ணா தி.மு.கழகத்துடன் உடன்பாடுகாண விரும்பவில்லையாம். ஆனால் அண்ணா தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவருக்காக கோலார் தொகுதியை நன்றிக் கடனாக விட்டுக்கொடுக்க விரும்பினாராம். ராஜ்ய சபைத் தேர்தலில் அந்த முன்னாள் எம்.எல்.ஏ தமது கழக உத்தரவை மீறி காங்கிரஸ் வேட்பாளருக்கு ஓட்டுப் போட்டாராம். அந்தத் தேர்தலில் நடுநிலை வகிக்கும்படி அந்த எம்.எல்.ஏக்குக் கழகத் தலைமையிலிருந்து தாக்கீது போனதாம். உங்களுக்காக ஒரு தொகுதியை பெற்றுத் தருகிறேன் என்று அப்போதே வீரப்ப மொய்லி அந்தப் 'பாண்டு ரெங்கனுக்கு' உறுதி அளித்தாராம்.

www.tamilarangam.net

அழகு நகைகளின் சுரங்கம்

ஜுவல்ஸ்

80,bld. Barbes,75018 PARIS
Metro: Marcadet Poissonniers
Tel: 42 59 11 52 Fax: 42 59 35 00

உங்கள்
எண்ணங்கள்
எங்கள்
கைவண்ணங்கள்

சொப்

80,bld. Barbes,75018 PARIS
Metro: Marcadet Poissonniers
Tel: 42 59 11 52 Fax: 42 59 35 00

றேட்ஸ்
செண்ரர்

193, rue du Fbg. St. Denis,75010 Paris
Metro: Gare du Nord ou La Chapelle
Tel: 42 05 41 36

www.tamilarangam.net

# பிரெஞ்சு அதிபர் தேர்தல் ஒரு திருப்புமுனை

கடந்த 11.12.94 மாலை 7 மணி 45 நிமிடங்களுக்குச் சரியாக திரு ஜாக் தெலோர் தனது முடிவை அறிவித்து விட்டார். தான் அடுத்த வருடம் மே மாதம் நடைபெற இருக்கும் பிரெஞ்சு அதிபர் தேர்தலில் இடதுசாரி வேட்பாளராகப் போட்டியிட முடியாது என்று திட்ட வட்டமாகத் தெரிவித்தார். இதற்கு இரண்டு முக்கிய காரணங்களை அவர் கூறினார். முதல் காரணம் அவருக்கு அறுபத்தொன்பது வயதாகி விட்ட நிலையிலும் சுமார் ஐம்பது ஆண்டு தொடர்ந்து பொதுச்சேவையில் ஏற்பட்ட சோர்வின் நிமித்தமும் இனிவரும் காலத்தில் அவர் தீவிர அரசியல் பணியினின்று சற்று ஒதுங்கி ஓய்வு மற்றும் குடும்பத்துடன் தமது நேரத்தை செலவிடவும் விரும்புகிறார். இரண்டாவது காரணம் கருத்துக் கணிப்பின் படியே அவர் அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று அதிபராக வந்தாலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ள வலதுசாரிகளுடன் ஒருமித்தோ அல்லது இடைவிடாத மோதலுடனோ அரசு இயந்திரத்தை நடத்துவது அவரைப் பொறுத்தவரை உகந்ததாக இல்லை தான் இடதுசாரி ரீதியான தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுத்து வெற்றிபெற்ற பின், வலதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்களின் இடையூறு காரணமாக அவ்வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போய் தான் ஒரு பொய்யனாக எலிசே அரண்மனையில் காலத்தை கழிக்க விரும்பவில்லை என்றும் அவர் விளக்கினார்.

ஜாக் தெலோர் என்ற தனி மனிதனின் இந்த நியாயமான, திட சிந்தனையுடன் கூடிய முடிவு அரசியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். உலகம் முழுவதும் பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் ஓநாய்கள் போலும் கழுதைப்புலிகள் போலும், சந்தர்ப்பவாதங்கள், அந்தர் பல்டிகள், வன்முறைகள், பணபலம், ஊழல், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல், கொள்கையற்ற கூட்டணிகள், அழிச்சாட்டியம், மானம் கெட்டபின்னும் நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நிற்கும் அட்டூழியம் நிறைந்த அரசியல்வாதிகள் மத்தியில், இந்தக் காலகட்டத்தில் இப்படி வெற்றி வாய்ப்பு இருந்தும் சொந்த தார்மீகத்தின் அடிப்படையில் பதவியை புறக்கணிக்கும் பண்பை பாராட்டியே தீரவேண்டும்.

ஜாக் தெலோர் என்ற தனி மனிதனின் இந்த நியாயமான, திட சிந்தனையுடன் கூடிய முடிவு அரசியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். உலகம் முழுவதும் பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் ஓநாய்கள் போலும் கழுதைப்புலிகள் போலும், சந்தர்ப்பவாதங்கள், அந்தர் பல்டிகள், வன்முறைகள், பணபலம், ஊழல், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல், கொள்கையற்ற கூட்டணிகள், அழிச்சாட்டியம், மானம் கெட்டபின்னும் நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நிற்கும் அட்டூழியம் நிறைந்த அரசியல்வாதிகள் மத்தியில், இந்தக் காலகட்டத்தில் இப்படி வெற்றி வாய்ப்பு இருந்தும் சொந்த தார்மீக அடிப்படையில் பதவியை புறக்கணிக்கும் பண்பை பாராட்டியே தீரவேண்டும்.

ஜாக் தெலோரின் இந்த முடிவால் இடதுசாரி அணி தனது தேர்தல் வெற்றி வாய்ப்பை முழுவதும் இழந்து விட்டது. சோசலிசக் கட்சியில் வெற்றி வாய்ப்புள்ள மற்றொரு இடதுசாரித் தலைவரை கண்டுபிடிப்பது மிகச் சிரமமாகத் தோன்றுகிறது.

மற்றபடி ஜாக் தெலோர் எந்த அளவுக்கு தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் அனுகூலமான திட்டங்களை வைத்திருந்தார் என்பது குழப்பமாகவே இருக்கின்றது. அவர் வலதுசாரி பிற்போக்கு

**பைசாச மன்றாடி**

வாதத்தை அமுல்படுத்திய இடதுசாரித் தலைவர் என்பதே நமது கருத்து. பிரான்ஸில் உள்ள ஐரோப்பிய அதிகார வர்க்கத்தின் கையை பலப்படுத்துவதிலும், பிரெஞ்சு விவசாயிகளுக்கு விரோதமான G.A.T.T உடன்படிக்கை விஷயத்தில் பிலாத்து போல் கைகழுவி விட்டநிலையிலும் இவர் ஒன்றும் உழைக்கும் வர்க்கத்துக்குப் போராடும் வர்க்க உணர்வு உள்ள இடதுசாரி சோசலிச வாதியென்று கூறமுடியாது. முதலாளித்துவ பாங்க் அதிகாரப் பரம்பரையின் வாரிசாக உருவாகி ரோஜா முத்திரை குத்தப்பட்ட சிவப்பு அங்கி அணிந்து வலதுசாரி பொருளாதாரத்துக்கு முரண்பாடாக ஒரு நொதும (Centrist) அரசியலை நடத்தக் கூடிய கொள்கை உடையவர் என்பதே நமது கருத்து.

இவர் அதிபராக இருந்தால் ஒரு இடதுசாரி அதிபராக இருக்கிறார் என்று பாமரக்குடிமகன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளலாமே ஒழிய, மார்கெட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டி பொருளாதாரமும், ஆள்குறைப்புத் திட்டம், இழுத்துமூடுதல்கள், செக்யூரித்தே சோஷியலில் நெருக்கடி ஏற்படுத்துதல், தனியாருடமையாக்கம், பொதுத்துறையில் லாபநோக்கத்துக்காக கழுத்தறுப்பு செய்தல் ஆகிய பிற்போக்கு அரசியலில் இவர் பிரதமர்ல பலாதூரின் பிரதி பிம்பமாகவே செயல்படுவார் என்பதே நமது அனுமானம். அந்த வகையில் இவர் போட்டியிடாமல் போனதால் சோஷலிஸ்டுகள் போல் நாம் கண்ணீர் சிந்தவேண்டிய அவசியமில்லை.

## கிழக்கு ஐரோப்பிய சோஷலிசம் சிதைந்த பிறகு இடது சாரிகள் கையாலாகதவர் என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்

அடுத்த இடதுசாரி முன்னணிக்கும் பிரதிநிதியாக அதிபர் தேர்தலில் நிற்க ஜாக் லாங் மற்றும் மிஷல் ரோக்கார் பெயர்கள் அடிபடுகின்றன. ரோக்காரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர் ஒரு மிதவாதி. தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு, வீட்டு வசதிவாய்ப்பு இவற்றில் அவர் ஒன்றும் வலதுசாரி பிற்போக்கு வாதிகளுக்குச் சளைத்தவர் அல்ல. அவர் பிரதமராக இருந்தபோது தான் பாரீஸ் நகரத்தைச் சுற்றி மூன்று வட்டங்களில் 20 NES உள்ள குடியிருப்புகள் தொழிற்சாலைகள் இவற்றை ஆறு, ஏழு வட்டங்களுக்குப் பெயர்த்து விட்டு பாரீஸ் மையத்திலிருந்து ஒரு பதினைந்து கிலோமீட்டர் ஆரத்துக்கு சாதாரணக்குடி மக்களுக்கு வீடில்லாமல் அவற்றில் ஐரோப்பிய ஏகபோகத் தொழில் மையங்களுக்கும் பந்தாட்டு நிறுவனங்களுக்கு, அலுவலகங்களுக்கு மட்டும் வாடகைக்கு விடுவது போன்ற திட்டம் தீட்டப்பட்டு அது பின்னர் கிடப்பில் போடப்பட்டது. ஜாக் லாங் கலாசார மந்திரி பதவி வகித்தவர். நல்ல பேச்சாளர் ஆனால் இன்று பல மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பு, வீட்டுவசதி வாய்ப்பு ஆகியவற்றுக்குத் தீவிரமான, புரட்சிகரமான திட்டங்கள் வைத்திருக்கிறாரா என்பது கேள்விக்குறிதான்.

இடதுசாரியின் வேட்பாளர் எவரும் பெர்நார் தப்பியின் ஆதரவு இல்லாமல் ஜெயிக்க முடியாது என்ற நிலைக்கு தன்னை உயர்த்திக் கொண்டும், மர்சேய் நகர மன்றத்தை நோக்கியும் முன்னேறிக் கொண்டிருந்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரும், ஒலிம்பிக் மர்சேய் கால்பந்தாட்ட நிறுவனத் தலைவருமான பெர்நார் தப்பி அண்மையில் வர்த்தக நீதிமன்றத்தில் திவால் என்று அறிவிக்கப்பட்டார். திவால் ஆன எவரும் **ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்க தகுதி இழக்க வேண்டிய சட்டம் இருக்கிறது.** இவர் அரசியல், கால்பந்தாட்டம், சொந்த தொழில் முதலீடுகள் பாங்கிக் கடன்கள், சொகுசுப்படகு, உல்லாச வீடு என்று பல பிரச்சினைகளைப் போட்டுக் குழப்பிக் கொண்டதாலும், இவரின் விரோதிகளின் எண்ணிக்கை வலதுசாரி ஆளும் வர்க்கத்துக்கு அதிகப்பட்டு விட்டதாலும் இன்று பழிவாங்கப் படுகிறார் என்ற ஒரு கருத்து அனுதாபத்தின் மூலம் ஏற்படுகிறது. உண்மையில் இவர் ஒரு கடைந்தெடுத்த வலதுசாரி பிற்போக்கு விளம்பர அரசியல்வாதி. அரசியலை புட்பாலாக நினைக்கும்போது யாரும் பெனால்டியை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எந்த ஒரு மனிதன் மீதும் நீதித்துறை கவனம் திருப்பப்படும்போது, அம்மனிதன் தான் அரசியலில் ஒரு அசகாய சூரனாக இருந்தாலும் ஊழல் சேற்றிலிருந்து மீள காலதாமதம் ஆகும். சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்பது பழமொழி.

பொதுமக்களும் தீவிரமான இடதுசாரிக் கொள்கைகள்:– அதாவது வேலை நிரந்தரம், குறைந்தபட்ச ஊதிய வரம்பை சமூகநீதியை, நிலைநிறுத்துதல், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீட்டுவசதி செய்து தருதல் ஆகியவை எந்த தனியார் நிறுவனங்களையும் மூடவிடாமல் தடைசெய்தல் போன்ற திட்டங்களை உருவாக்கும் தலைவர்களைத் தேட விரும்பவில்லை. சுருக்கமாக சொல்லப் போனல் சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய சோஷலிசம் சிதைந்த பிறகு இடதுசாரிகள் கையாலாகாதவர்கள் என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். எனவே மீண்டும், மீண்டும் வலதுசாரி மனப்போக்கு உள்ளவர்களுக்காக அவர்கள் சோஷலிச லேபில் குத்தப்பட்டு காயடிக்கப்பட்ட பிற்போக்கு வாதிகளாக இருந்தாலும் அவர்களையே விரும்புகிறார்கள் அல்லது ஏகபோகங்களில் சௌகரியத்தைப் பார்க்க முடிவு பூண்ட பல்லதூர்களுக்கு ஓட்டுப்போட தயார் என்று கருத்துக் கணிப்பு மூலம் தெரிவிக்கிறார்கள். இவர்களின் கருத்தை உருவாக்க என்றே டெலிவிஷன்கள் பத்திரிகைகள் முடுக்கி விடப்படுகின்றன.

இத்தாலியில் பர்லஸகோனி போன்ற முதலாளித்துவ பிற்போக்கு வாதிகளுக்கு மாலையிட்டு ஆட்சிபீடத்தை அளித்த மக்கள் ஆறுமாதத்துக்குள் ஏமாற்றம் அடைந்து அவர்களின் தொழில் நல சமூகநீதி உரிமைகள் கேள்விக்குறிக்குத் தள்ளப்பட்டு ஊழல் லஞ்சலாவன்யக் கும்பலிடம் தங்களை அடகுவைத்துக் கொண்டதுக்காக மக்கள் இத்தாலியில் அவலப் படுகிறார்கள்.

இதே போன்ற மனப்போக்கு பிரெஞ்சு மக்களிடமும் இருந்தால் இவர்களின் நிலையும் இன்னும் மோசமாகி வறுமையும், வேலை இல்லாத் திண்டாட்டமும் வீடில்லாத் திண்டாட்டமும் தாண்டவமாடும். அப்படிப்பட்ட நிலையில் குற்றம் பெருகுதல் போதைப்பொருள், குடியால் சீர்கேடு ஆகியவை நிகழவும் வாய்ப்பிருக்கிறது. பொதுவாக எதிர்காலம் பிரகாசமாக இல்லை எனவே தோன்றுகிறது. அப்படி நான் அனுபானிப்பது பொய்யாகிப் போய்விட்டால் அதைப்பற்றி மகிழ்ச்சிப் படவேசெய்வேன். மக்கள் நலமாக இருக்க வேண்டும் அதை இடதுசாரி மட்டும்தான் செய்யமுடியுமா? நாங்களும் செய்து காட்டுவோம் என்று வலதுசாரிகள் நிரூபித்தார்களானால் அவர்களுக்குத் தலை வணங்குவதில் பெருமைப் படுகிறேன்.

www.tamilarangam.net

# பாரம்பரிய வழக்கத்துடன் தொடரும் கிறிஸ்மஸ் பண்டிகை

## நாட்டுக்கு நாடு வேறுபடும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள்

கிறிஸ்மஸ் பண்டிகையை உலகமெங்கும் கொண்டாடுகிறார்கள். எல்லா நாடுகளிலும் இப்பண்டிகையை ஒரே மாதிரி கொண்டாடுவது இல்லை. நாட்டுக்கு நாடு கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் வேறுபாடு உண்டு.

### கென்யா

ஆபிரிக்காவில் உள்ளது கென்யா என்னும் நாடு. இங்கு கிறிஸ்மஸ் தாத்தா (சாண்டாகிளாஸ்) கலைமானின் மீது வருவதில்லை. ஹெலிகொப்டரில் வந்து குதிக்கிறார். ஆபிரிக்க பொலீஸ்காரர்களின் குழந்தைகளுக்கு கிறிஸ்மஸ் பரிசுகளைக் கொடுக்க ஆபிரிக்க பொலிஸார் தங்கள் தங்கள் இனத்தின் தேசிய உடை அணிந்து கிறிஸ்மஸ் கொண்டாடுகிறார்கள்.

### ஹாலந்து

டச்சுக் குழந்தைகளின் அன்புக்கு பாத்திரமான செயிண்ட் நிக்கலஸ் சாமியார்தான் சாண்டாகிளாஸ் ஆக உலகம் பூராவும் ஏற்கப்பட்டவர். ஹொலந்தில் டிசம்பர் 6ம் திகதி தான் கிறிஸ்மஸ் கொண்டாட்டம். விசேஷ விடுமுறையும் கூட பிஷப்பின் உடையில் குதிரைமீது அமர்ந்து ஆம்ஸ்டர்டாம் நகருக்குள் பிரவேசிப்பார் செயிண்ட் நிக்கலஸ்.

### சைனா

பட்டுத் துணியினாலான பல்லக்கில் குழந்தை ஏசுவின் உருவத்தை வைத்து அலங்காரம் செய்து ஊர்வலமாக எடுத்துச் செல்லுவார்கள். குழந்தை ஏசு பூமியில் அவதரித்ததை சீனா நாட்டுக் கிறிஸ்தவர்கள் வரவேற்கும் இந்த வைபவத்தில் ஊர்வல வழி எல்லாம் விளக்குகளும் கொடிகளும் தோரணங்களும் கட்டி அழகுபடுத்தப்பட்டு இருக்கும்.

### ஜேர்மனி

கிறிஸ்மஸ் கரோல் என்று புகழப்படும் பாடல்களை மேற்கு ஜேர்மனிக் குழந்தைகள் கூட்டமாகப் பாடுவது உலகப் புகழ்பெற்றதாகும். கிறிஸ்மஸ் ட்ரீ என்று வீடுகளில் மரத்தை நட்டு அலங்காரம் செய்து மகிழும் பழக்கம் ஜேர்மன் நாட்டில் இருந்து வந்ததுதானே! ஆகவே, இங்கு கிறிஸ்மஸ் ட்ரீ அலங்காரங்கள் விசேஷமானவை.

### ஸ்வீடன்

கிறிஸ்மஸின்போது ஒவ்வொரு வீட்டிலும் மெழுகுவர்த்திகள் ஜெகஜோதியாக ஒளி சிந்தி நிற்கும். குழந்தைகள் மெழுகுவர்த்தி ஸ்டாண்டுகளுக்கு விதவிதமான அலங்காரம் செய்வதில் ஈடுபடுவார்கள். கிராமப்புரங்களில் குடியானவர்கள் வைக்கோலினால் கலைமான்களைச் செய்து கிறிஸ்மஸ் ட்ரீயுடன் விற்பனை செய்வார்கள்.

### ஜோர்டான்

ஏசு பிறந்த பெத்லகேம் இருப்பது இந்த நாட்டில்தான். ஆகவே, ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் குழந்தை ஏசு அவதரித்த மாட்டுத் தொழுவத்தைத் தரிசிக்க இங்கு வந்து கூடுகிறார்கள். ஏசு சர்ச் கட்டப்பட்டு உள்ளது.

### அமெரிக்கா

பல்வேறு நாடுகளில் இருந்தும் வந்து குடியேறியவர்கள் தங்கள் தங்கள் நாட்டு கிறிஸ்மஸ் பண்டிகைப் பழக்க வழக்கங்களையும் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனர். பனி மூடிய பாதைகளில் கிறிஸ்மஸ் பாடல்களைப் பாடியபடி ஊர்வலம் போவது, வீடுகளில் கிறிஸ்மஸ் மரத்துக்கு அலங்காரம் செய்வது, மலர் வளையங்களைக் கட்டித் தொங்க விடுவது இப்படி எல்லாமும் இங்கு உண்டு.

www.tamilarangam.net

# கிறிஸ்மஸ் பைபிளில் ஆதாரங் கொண்ட கொண்டாட்டமா?

– பயஸ்

## இந்தக் கொண்டாட்டத்தின் தேதி

மக்ளின்டாக் ஆண்டு ஸ்டிராங்ஸ் சைக்ளோபீடியாவில் பின்வருமாறு சொல்லியிருக்கின்றது. "கிறிஸ்மஸ் ஆசரிப்பு தெய்வீக நியமிப்புமல்ல. பு[திய] ஏற்பாட்டில் தோற்றத்தைக் கொண்டுமில்லை. கிறிஸ்துவின் பிறந்த நாளை [புதிய] ஏற்பாட்டில் ஸசிருந்தோ நிச்சயமாகவே வேறு எந்தத் தகவல் மூலத்திலிருந்தோ உறுதியாய் அறிந்து கொள்ள முடியாது" -(நியுயார்க் 1871)புக் 11 பக் 276.

இயேசு பிறந்த சமயத்தில் மேய்ப்பர்கள் இரவில் வயல்வெளிகளில் இருந்தார்களென லூக்கா 2:8-11 காட்டுகின்றது. இயேசுவின் காலத்தில் அனுதின வாழ்க்கை என்ற ஆங்கில புத்தகத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கின்றது. "மந்தைகள்..... குளிர்காலத்தை மூடப்பட்டுள்ள மறைப்பின் கீழ் கழித்தன. இந்த ஒன்றிலிருந்தே குளிர்காலத்தில் கிறிஸ்மஸ் கொண்டாடுவதற்குக் குறித்துள்ள தேதி சரியாயிருக்க முடியாதென காணலாம். ஏனெனில் மேய்ப்பர்கள் வயல் வெளிகளில் இருந்தார்களென சுவிசேஷத்தில் சொல்லியிருக்கின்றது. –(நியு யார்க் 1962) ஹென்ரி டானியல் ரோப்ஸ் பக் 228. தீ என்ஸைக்ளோபீடியா அமெரிக்கானா பின்வருமாறு நமக்குத் தகவல் அளிக்கின்றது. டிசம்பர் 25ஐ கிறிஸ்மஸ் என நிறுவினதற்குக் காரணம் ஒருவாறு தெளிவாய் அறியப்படாதிருக்கிறது. ஆனால் அந்த நாள் "சூரியனின் மறுபிறப்பைக் கொண்டாடுவதற்கு பகல்கள் நீளமாகத் தொடங்கும் குளிர்கால சூரிய கதிர்த் திருப்ப சமயத்திற்கு ஏறத்தாழ நிகழ்ந்த புற மத பண்டிகைகளுக்கு ஒத்திருக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டதெனப் பொதுவாய் கருதப்பட்டது.... [ரோம வேளாண்மைத் தெய்வமான சாட்டர்னுக்கும் [சனி] சூரியனின் திரும்பப் புதுப்பிக்கப்பட்ட வல்லமைக்கும் அர்ப்பணம் செய்யப்பட்ட ஒரு பண்டிகையான ரோம சாட்டர்னேலியாவும் இந்தச் சமயத்தில் நிகழ்ந்தன. மேலும் கிறிஸ்மஸ் பழக்கவழக்கங்கள் இந்தப் பூர்வ புறமத கொண்டாட்டங்களில் மூலத் தோற்றங் கொண்டிப்பதாக எண்ணப்பட்டன.

1977 புத் 6 பக் 666

நியு கத்தோலிக் என்ஸைக்ளோபீடியா பின்வருமாறு ஒப்புக் கொள்கிறது. "கிறிஸ்து பிறந்த தேதி அறியப்பட்டு இல்லை. சுவிஷேங்கள் அந்த நாளையோ மாதத்தையோ குறிப்பிடுகிறதில்லை.... H யுஸ்மர் யோசனை கூறிய தற்காலிகக் கருத்தின்படி..... மேலும் இன்றைய நிபுணர்கள் பெரும்பான்மையர் ஏற்பதுமானது. கிறிஸ்துவின் பிறப்பு குளிர்கால கதிர்த்திருப்பத் தேதியாகக் குறிக்கப்பட்டதாகும். ஜூலியன் ஆண்டுக்குறிப்பேட்டில் டிசம்பர் 25 எகிப்திய ஆண்டுக் குறிப்பேட்டில் ஜனவரி 6] ஏனெனில் இந்த நாளில் சூரியன் வட வானங்களுக்குத் திரும்பும் அதன் திருப்பத்தைத் தொடங்குகையில் மித்திராவின் புறமத பக்தர்கள் டைஸ் நாட்டாலிஸ் ஸோலிஸ் இன்விக்டி (வெல்ல முடியாத சூரியனின் பிறந்தநாளைக்) கொண்டாடினார்கள். டிச 25 274 ல் ஆரிலியன் சூரியக்கடவுளை அந்தப் பேரரசின் பிரதான காப்பாளனாக அதிகார அறிவிப்பு செய்து காம்பஸ் மாரிஷியஸில் அதற்கு ஓர் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தான். சூரிய வழிபாட்டு மதம் ரோமில் குறிப்பிடத் தக்க முறையில் செல்வாக்குமிகுந்த ஒரு சமயத்தில் கிறிஸ்மஸ் தொடங்கி வைக்கப்பட்டது."

புத் 111 பக் 656.

கிறிஸ்துவ மதத்தைப் பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்க பாதிரிமார்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். பொது அறிவை வளர்க்கக்கூடிய சிறந்த கேள்விகளுக்கு நண்பனின் அன்பளிப்பு உண்டு.

அனைத்து தொடர்புகளுக்கும்
NANBAN,
23, rue Phillipe de Girard, 75010 Paris.

www.tamilarangam.net

**ஆபிரிக்கா**

ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள எத்தியோப்பியாவில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்கள். இவர்கள் மற்ற கிறிஸ்தவர்களைப் போல் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவதில்லை. காரணம் இங்கு ஆண்டுக்கு பதின்மூன்று மாதங்கள் வழக்கில் உள்ளன. எனவே, ஜனவரி மாதம் 7ம் திகதிதான் இவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாடுவார்கள். இதேபோல் ஆஸ்திரேலியா நாட்டு மக்களும் டிசம்பரில் கிறிஸ்மஸ் கொண்டாடாமல் கோடையில் தான் கொண்டாடுகிறார்கள். கம்யூனிச நாடுகளில் போலந்து நாட்டுமக்கள் மட்டும் மிக விமரிசையாக கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

**ஆஸ்திரேலியா**

நியூசவத்வேல்சில் உள்ள புகழ்பெற்ற சிட்னி துறைமுகத்தை அடுத்து உள்ள போண்டிபீச்சுக்கு குடும்பத்தோடு போய் பண்டிகை கொண்டாடுகிறார்கள். வான வெடி பட்டாசுகளை பீச் மணலில் வெடிபார்கள். வான் கோழிப் பொரியல் விசேஷம். இவர்களுக்கு கிறிஸ்மஸின்போதுதான் கோடைக்காலம். ஆகவே, கடலில் நீந்துவார்கள். அலைமீது சறுக்கி விளையாடுவார்கள்.

**பிரான்ஸ்**

பிரெஞ்சு குழந்தைகளுடைய கிறிஸ்மஸ் தாத்தாவின் பெயர் பேர் நோயல் புகைபோக்கி வழியாக வீட்டுக்குள் இறங்கி அங்கு குழந்தைகள் வரிசையாக வைத்து உள்ள பூட்ஸ்களில் ஸ்வீட்டுகளையும் பொம்மைகளையும் பரிசுகளாகப் போட்டு போகும் பேர் நோயலின் பசிக்கும் தாகத்துக்கும் குழந்தைகள் ஒரு பிளேட்டில் பிஸ்கட்டுகளையும் மதுபானத்தையும் பூட்ஸ்களுக்கு அருகே வைப்பார்கள். நார்மாண்டியில் உள்ள குழந்தைகள் தங்களுக்கு கிறிஸ்மஸ் பரிசுகளை மூன்று அரசர்கள் (த்ரி ஒயிஸ் மென்) அளிப்பதாக நம்புகிறார்கள்.

**சிலி**

சாண்டியா கோவில் கிறிஸ்மஸின் போது வெப்பம் 100 டிகிரி பாரன்ஹீட்டாக இருக்கும். ஆகவே, கிறிஸ்மஸ் பண்டிகைக்கு சாண்டாகிளாஸ் ஐஸ்கிரீம் விற்பனை செய்வார். விழாக்கோலாகலங்கள் எல்லாம் இரவில்தான் நடைபெறும். ஏனென்றால் இரவு நேரத்தில்தான் குளிர்ச்சியாக இருக்கும்.

**கிரீஸ்**

எல்லா நாட்டைப் போலவும் தபால்காரரின் பை கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளாலும் பரிசுப் பொருட்களாலும் நிரம்பி வழியும். ஆனால், கிரீஸ் தேசத்து குழந்தைகளுக்குப் பண்டிகைப் பரிசு கிறிஸ்மஸின்போது கிடைக்காது. புத்தாண்டின்போதுதான் கிடைக்கும். சிவப்பு ஆடை அணிந்து செயிண்ட் வாஸல் என்பவர் (சாண்டாகிளாஸ் போல) பரிசுப் பொருட்களை வழங்குவார்.

**ஸ்கண்டிநேவியா**

கிறிஸ்மஸ் பண்டிகையை எப்படி கொண்டாடுகிறார்கள் தெரியுமா? பறவைகளுக்கு விருந்தளிப்பதன் மூலம். எப்படி? கோதுமைக் கட்டி வயல்வெளியில் வைத்துவிடுகிறார்கள். இதன்கீழேயும் கோதுமை தானியமணிகளைப் பரப்பி இருப்பார்கள். பறவைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

**ஹாலந்து**

ஹாலந்து தேசத்து குழந்தைகள் சாண்டாவை இழுத்து வரும் ரெயின்டீர் கலைமானுக்கு உணவாக காரட்டுகளையும் வைக்கோலையும் வைத்து வரவேற்கிறார்கள்.

**நன்றி வீரகேசரி**

# அடுத்த இதழில்.......

வெற்றி பெற வாய்ப்பு இருந்தும் பிரெஞ்சு அதிபர் தேர்தலில் தான் நிற்கப்போவதில்லை என ஜாக் தொலோர் அறிவித்து விட்டடார்! ஏன்?
மற்றும் வருங்கால நிலைமைகளை அலசுகிறது பைசாச மன்றாடியின் கட்டுரை.

www.tamilarangam.net

# நண்பன் அறிவுப் போட்டி

1. கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்த முதல் தூதன் பெயர் என்ன?

.........................................

2. வால்வெள்ளிச் சிரிப்பின் துணையோடு பாலன் பிறந்த இடம் வந்த மூவரின் பெயர் என்ன?

.........................................

3. கிறிஸ்து பிறந்த இடத்தின் பெயர் என்ன?

.........................................

4. கிறிஸ்து பிறப்புச் செய்திக்கு முன்பு இன்னுமொரு பெண்ணுக்குப் பிள்ளைப் பேறு அறிவிக்கப்பட்டது. அவள் பெயர்? பிறந்த பிள்ளையின் பெயர்?

.........................................

5. இரண்டு வயது குழந்தைகளைக் கொல்லும்படி அறிவித்த கொடுங்கோலனின் பெயர் என்ன?

.........................................

6. அந்தக் கொடுங்கோலன் மடிவதற்கு என்ன காரணம்?

.........................................

7. கிறிஸ்துவைக் கொண்டு தாயும் – தந்தையும் தப்பிப்போன இடம் என்ன?

.........................................

8. இடையர்கள் யார் வரவை எதிர்பார்த்து இருந்தனர்?

.........................................

9. கிறிஸ்துவோடு பெற்றோர்கள் பிறந்த இடத்திற்து திரும்ப வராததிற்கு காரணம் அப்போது ஆட்சி செய்தவன் பெயர் என்ன?

.........................................

10. கிறிஸ்துவுக்கு ஊரின் பெயரும் உண்டு அப்பெயர் என்ன?

.........................................

11. கிறிஸ்மஸ் மரம் முதலில் தோன்றிய நாட்டின் பெயர் என்ன?

.........................................

12. உலகெங்கும் புகழ்பெற்ற அமைதி இரவு காரோல்ஸ் கீதம் ஒலித்த இடம் ஊர் அதை எழுதிய குருவானர் பெயர் என்ன?

.........................................

13. கிறிஸ்துவின் தாய்மொழி என்ன?

.........................................

* பங்குபெறுவோர் வெள்ளைத்தாளில் பதிலை மட்டும் அனுப்பினால் போதுமானது.

**போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அன்பளிப்புகள் உண்டு.**

www.tamilarangam.net


லா சப்பலில்.......

சேலைகளின் சோலைவனங்கள்


SAREELAND CITYGIRL

NAIR SAAB

Tel: 40 34 72 28 - Fax: 40 34 72 29



அனைத்துவிதமான தமிழ் புத்தகங்களையும்
நீங்கள் பெற்றுக்கொள்ள ஐரோப்பாவில்
ஒரேயொரு புத்தக நிலையம்






70, rue Louis Blanc, 75010 Paris

Tel: 42 05 88 67 - Fax: 42 05 83 04

www.tamilarangam.net

பேராசிரியர் சச்சிதானந்தம் அவர்கள் எழுதிய

# GRAMMAIRE FRANCAISE - பிரெஞ்சு இலக்கணம்

என்ற நூலிலிருந்து

## Degrés de l' adjectif

Degré
- Positif
- Comparatif
- Superlatif

| | | |
|---|---|---|
| Le positif | : | Sivadji est un bon acteur.<br>சிவாஜி ஒரு நல்ல நடிகன். |
| Le comparatif | : | Thiruchi est plus grand que Jaffna.<br>திருச்சி யாழ்ப்பாணத்தை விட பெரியது. |
| Le superlatif | : | L' Himalaya est la plus haute chaîne de montagne du monde.<br>இமாலயாவே உலகத்தில் மிக உயரமான மலைத் தொடர். |
| Le positif | : | Stéphane est un élève savant.<br>ஸ்தெ(f)வன் ஓர் அறிவான மாணவன். |
| Le comparatif | : | Sebastien est plus savant que Stéphane.<br>செபஸ்தியன் ஸ்தெ(f)வனை விட ஸ்தெ(f)வனிலும் பார்க்க அறிவானவன். |
| Le superlatif | : | Sylvain est le plus savant élève de la classe.<br>சில்வனே வகுப்பில் மிக அறிவான மாணவன். |
| Le comparatif - égalité | : | Simon est aussi savant que stéphane.<br>சைமன் ஸ்தெ(f)வனைப் போல் அறிவானவன். |
| Le comparatif - infériorité | : | Stéphane est moins savant que Sebastien.<br>ஸ்தெ(f)வன் செபஸ்தியனை விட செபஸ்தியனிலும் பார்க்க அறிவில் குறைந்தவன். |
| Le comparatif - Supériorité | : | Sebastien est plus savant que Stéphane.<br>செபஸ்தியன் ஸ்தெ(f)வனை விட ஸ்தெ(f)வனிலும் பார்க்க அறிவுள்ளவன். |

Stéphane n'est pas si / aussi savant que Sebastien.

ஸ்தெ(f)வன் செபஸ்தியனைப் போல் அறிவுள்ளவன் அல்லன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# RAMANAN
# TEXTILES

ரசனைக்கேற்ற
ஆடைத்தெரிவுகளுக்கு

# ரமணன்
# ரெக்ஸ்டைல்ஸ்

**RAMANAN TEXTILES**

199, rue du fbg. St. Denis, 75010 Paris
Mo: La Chapelle ou Gare du Nord
**TEL: 42 05 78 07**

www.tamilarangam.net




புதுதில்லி நவ.10.

காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தான் ஆதரவு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தாக்கல் செய்ய இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகளும் இதர நாடுகளும் முன் வராமல் இருந்துவிட்டதற்காக அந்நாடுகள் அனைத்திற்கும் இந்தியா நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளது.

புதுதில்லி நவ.14.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக ஊழல் வழக்குத் தொடருவது தொடர்பாக சுப்பிரமணிய சுவாமி உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு மீது ஆளுநர் சென்னாரெட்டிக்கு நோட்டிஸ் அனுப்பப்பட்டுள்ளது. தமிழக அரசுக்கும் முதல்வர் ஜெயலலிதாவுக்கும் கூட இத்தகைய நோட்டிசுகளை உச்சநீதி மன்றம் அனுப்பியுள்ளது. அனைவரும் 14 நாள்களுக்குள்தங்கள் பதில்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை நவ.14.

அ.இ.அ.தி.மு.க. அரசின் மீது விசாரணைக் கமிஷன் அமைக்கப் பிரதமரைக் கோரி ஒரு கோடி கையெழுத்துகளைத் திரட்டும் கையெழுத்து இயக்கத்தைத் தமிழ்நாடுஇ.காங்கிரஸ் கட்சி திங்களன்று தொடங்கியது.

## உலகத் தமிழ் மாகநாடு ஏற்பாடு: மந்திரிகள் ஆய்வு

தஞ்சாவூரில் உலகத் தமிழ் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கூட்டம் தஞ்சாவூரில் நடந்தது. மாநாட்டுக்காக செய்யப்பட்டுவரும் ஏற்பாடுகளை அமைச்சர்கள் எஸ்.டி. சோமசுந்தரம் ஆர்.எம். வீரப்பன் எஸ்.கண்ணப்பன் கே.ஏசெங்கோட்டையன் எஸ்.ரகு ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். மாநாட்டிற்கு வருபவர்கள் தங்குவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 14 ஹோட்டல்களில் 172 அறைகளும் 31 கல்யாண மண்டபங்களும் 36 பள்ளிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் மாநாட்டிற்கு வரும் பொது மக்கள் தங்குவதற்காக ஆட்பெஸ்டாஸ் கூரைகள் போடப்பட்ட 5 பெரிய ஷெட்டுகள் அமைக்கப்படுகிறது.

### முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள்

அரசாங்கத்தைப் பொருத்த வரையில் இனிமேல் எதற்கும் தன் பெயரை வைக்க வேண்டாம் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் கேட்டுக்கொண்டார்.

## ஐரோப்பிய அமைப்பில் சுவீடனும் சேரும்

ஐரோப்பிய நாடுகள் அமைப்பில் சுவீடனும் சேர வேண்டுமென்று அந்நாட்டில் நடந்த கருத்துக் கணிப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அமைப்பில்சுவீடன் சேர ஆதரவு தெரிவித்து 52 சதம் பேரும் எதிர்ப்பு தெரிவித்து 47 சதம் பேரும் வாக்களித்திருந்தனர். ஒரு சதம் வாக்காளர்கள். கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.

## சிராக்கிற்கு ஏற்பட்ட தலைவலி

அப்பே பியர், பாரிஸ் மாநகர மேயர் சிராக்கை கடுமையாக தாக்கியுள்ளார். சிராக்கிற்கு பிரான்சை ஆளும் தகுதி இல்லை என அவர் கண்டனம் தெரிவித்துள்ளது சிராக்கிற்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. அப்பே பியர் பிரெஞ்சு மக்களால் மிக அதிகமாக மதிக்கப்படும் ஒரு பாதிரியார். வீடில்லா மக்களுக்கு வீடு தேடித்தந்து மக்கள் மனங்களில் மரியாதையை பெற்றுள்ள சமூக சேவகர்.

பாரிஸ் மாநகரில் மட்டும் 25,000 அரசாங்க வீடுகள் காலியாக உள்ளன. அவைகளை வீடில்லா மக்களைக் கொண்டு நிரப்பி தனது தலைவலியை நீக்குவதற்கு சிராக் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

சென்றமாத இறுதிவரை புள்ளி விபரத்தில் முதன்மையிடம் வகித்த சோசலிசக் கட்சி வேட்பாளர் ஜாக் தொலோர் தான் அதிபர் போட்டிக்கு போட்டியிடுவதைப்பற்றி எந்த முடிவும் சொல்லவில்லை.

இந்த மாத ஆரம்பத்தில் தான் நிற்பதில்லை என்று அவர் அறிவித்ததில் பெருமகிழ்ச்சி கொண்ட அரசியல் தலைவர்களில் முதன்மையிடம் சிராக்கிற்கே உரியது. அதுமட்டுமல்லாமல் தன்னுடைய நிலையை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அவருக்கு அமைந்துவிட்டது. இந்த நிலையில் பாதிரியாரின் கண்டனம் ஆழ்மையான ஒரு பாதிப்பை சிராக்கிற்கு ஏற்படுத்திக்கொடுத்தது பகிரங்கமான ஒரு உண்மை.

www.tamilarangam.net




## மித்திரனுடைய மகள்?

பாரி மேட்ச்' PARIS MATCH பிரான்சிலிருந்து வெளிவரும் புகழ்பெற்ற வார இதழ். தனது நவம்பர் 10ம் தேதி இதழில் அதிபர் மித்திரனுடைய அந்தரங்க வாழ்வின் ஒரு பகுதியை படமாக பிரசுரித்து கட்டுரையும் வெளியிட்டு இருந்தது. அதிபருக்கு மற்றொரு பெண் மூலம் பிறந்த மகளோடு அவர் உரையாடியது அந்த படம்.

பிரசுரிக்கப்பட்ட முறைக்கு மித்திரன் அப்பத்திரிகைக்கு கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்டார். மற்றபடி தனது மகள் பற்றிய உண்மையை அவர் மறுக்கவில்லை. அது குறித்து பயப்படவும் இல்லை. 1984ம் ஆண்டே தொலைக்காட்சி நிருபர் கேட்ட கேள்விக்கு ஆமாம் மணமுடிக்காத பெண்ணிடமிருந்து எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அதனால் என்ன?' என சாதாரணமாக பதிலளித்தார். பிரெஞ்சு மக்களும் இந்த விஷயத்தை சாதாரணமாகவே எடுத்துக் கொண்டார்கள். எதிர்ப்பும் தெரிவித்தார்கள். அதிபர் எவ்வழி அவ்வழியே மக்களின் வழி.

## வீர விளையாட்டு

வீர விளையாட்டு வாலிபர்களுக்குத்தான் பொருந்தும் என்று அனைவரும் நினைப்பது இயல்பு. அதிலும் குத்துச் சண்டை விளையாட்டை பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஆனால் சென்ற நவம்பரில் லாஸ் வெகாவில் நடைபெற்ற குத்துச் சண்டை போட்டியில் 45 வயது போர்மேன் 28 வயது உலக சம்பியன் மைக்கேல் மூரை தோற்கடித்து விளையாட்டு ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

இதே போர்மேன் உலக சம்பியனாக இருந்தபோது முகம்மது அலியிடம் படுதோல்வி அடைந்தார். இது 20 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்க ஜைர் நாட்டில் இருந்தது. முகம்மது அலியும், போர்மேனும் விரைவில் வடகொரியா செல்ல இருக்கிறார்கள் என்பது புது செய்தி.

## 'கனவுகள் தொடருதே'

தாய்மண் கடலோரம்
பட்டுமணல் பரப்பில்
தனியான கனிவான
பார்வை என்றுவீசும்
காலைக் கதிரவனைத்
தேடிடும் உள்ளம்
மணல் ஆற்றில்
ஒயில் நடை.....
பயின்ற காலம்
மடிந்து எழும்
அலையின் ஓசையில்
மயங்கிய மங்கிய
மஞ்சள் வெய்யில்
மனதைத் தழுவிட
காற்றின் காதலில்
நிர்மலமான வானத்தை
மல்லாந்து பார்த்து....
படுத்திருந்த மாலை நேரம்
அலையும் மீன்களுக்கு
தாலாட்டுப் பாடும்
செவ்வானச் செங்கதிரோனை
மேகங்கள் விழுங்கிவிடும்
காட்சியில் லயித்தவன்
மனதிலெழும் பரவசத்தில்
நீலக்கடல் அலைகள்
நெஞ்சின் அலைகளாய்
வாலைக் குமரியவள்
பக்கத்தில் வந்தமர்ந்து
தென்பாங்குபாடிய......
காதலின் காலங்களும்
கவலையற்ற ரேங்களும்
கனவுகளாகத் தோன்றுதே!
துருவங்கள் வேறுபட்டன...
காதல் சொந்த மண்ணில்
பாவிநானின்று பாதாளரயிலில்
மெய்மறந்து தூங்கும்
தூக்கமற்ற நேரங்களிலும்
கனவுகள் தொடருதே......!

கி.கிறிஸ்ரியன்

www.tamilarangam.net

# மயிர்கூடச்செறியும் பயணம்

உயிரோடு திரும்பி வந்துள்ளார் லண்டன் பிபிசி நிருபரான பீம் ரீஸ். 1993ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து இவர் செல்லும் வரை 69 வெளிநாட்டவர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு வழியாக பல முறைகளை கடைப்பிடித்து இஸ்லாமிய தீவிரவாதிகளின் குகைக்கே சென்று திரும்பியுள்ளார்.

'மேற்கத்திய அரசுகள் உதவியை நிறுத்திவிட்டால் இந்த அரசாங்கம் இரண்டு வாரம் கூட தாக்குப் பிடிக்காது. வெளிநாட்டவர்களை வெளியேறச் சொல்லி எச்சரித்துவிட்டோம். அவர்கள் போகவில்லை. எனவே கொல்கிறோம்.' என்று சொன்ன ஒருவரிடம் 'என்னை ஏன் கொல்லாமல் இருக்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, 'எங்கள் தலைவர்கள் உங்களைப் பாதுகாக்கச் சொல்லியுள்ளார்கள்' என அவர் பதிலளித்தார்.

டைம் பத்திரிகையிலும் ஆங்கில கார்டியன் தினசரியிலும் வெளியான இக்கட்டுரையளில் பீல் ரீஸ் கண்டுபிடித்த முக்கியமான விஷயம் என்ன?

இஸ்லாமிய தீவிரவாதிகள் நாட்டின் பெரும்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள். சுமார் 200 கி.மீ. தூரத்திற்கு இந்த கொரில்லாக்களோடு பயணம் செய்த அவர் அங்கு ஏராளமான வாகனங்களைக் கண்டார். அவை பொலிசாரிடமிருந்து கைப்பற்றப்பட்டவை. பயங்கரவாதிகள் என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இவர்கள் கட்டுப்பாடான உறுதியான சக்தியாக இருக்கிறார்கள்.

இப்போராளிகள் நாட்டுப் புறங்களில் சுமார் நூறு இடங்களில் இயங்குகிறார்கள். வெடிமருந்துகளை தயாரிக்கிறார்கள். 1992ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதல் சுற்றில் இஸ்லாமிய முன்னணி வெற்றி பெற்றது.

இரண்டாது சுற்றிலும் வெற்றிபெற வாய்ப்பு இருந்த ரேத்தில் அல்ஜீரிய அதிபர் உடனே ராஜினாமா செய்து அரசை ராணுவத்திடம் ஒப்படைத்தார். அதிலிருந்து பல தீவிரவாத அமைப்புகள் ராணுவ ரீதியாக போராடத் துவங்கிவிட்டன. தேர்ந்தெடுக்கப்படாத இந்த அல்ஜீரிய அரசாங்கத்திற்கு முறையாக தேர்வு செய்து ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு வந்த மேற்கத்திய ரீதியில் ஆட்சிக்கு வந்த மேற்கத்திய அரசாங்கங்கள் பக்கபலமாக இருக்கின்றன.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மயிர்கூச்செறியும் பயணம்

உயிரோடு திரும்பி வந்துள்ளார் லண்டன் பிபிசி நிருபரான பீப் ரீஸ். 1993ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து இவர் செல்லும் வரை 69 வெளிநாட்டவர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு வழியாக பல முறைகளை கடைப்பிடித்து இஸ்லாமிய தீவிரவாதிகளின் குகைக்கே சென்று திரும்பியுள்ளார்.


'மேற்கத்திய அரசுகள் உதவியை நிறுத்திவிட்டால் இந்த அரசாங்கம் இரண்டு வாரம் கூட தாக்குப் பிடிக்காது. வெளிநாட்டவர்களை வெளியேறச் சொல்லி எச்சரித்துவிட்டோம். அவர்கள் போகவில்லை. எனவே கொல்கிறோம்.' என்று சொன்ன ஒருவரிடம் 'என்னை ஏன் கொல்லாமல் இருக்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, 'எங்கள் தலைவர்கள் உங்களைப் பாதுகாக்கச் சொல்லியுள்ளார்கள்' என அவர் பதிலளித்தார்.

டைம் பத்திரிகையிலும் ஆங்கில கார்டியன் தினசரியிலும் வெளியான இக்கட்டுரையளில் பீப் ரீஸ் கண்டுபிடித்த முக்கியமான விஷயம் என்ன?

இஸ்லாமிய தீவிரவாதிகள் நாட்டின் பெரும்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள். சுமார் 200 கி.மீ. தூரத்திற்கு இந்த கொரில்லாக்களோடு பயணம் செய்த அவர் அங்கு ஏராளமான வாகனங்களைக் கண்டார். அவை பொலிசாரிடமிருந்து கைப்பற்றப்பட்டவை. பயங்கரவாதிகள் என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இவர்கள் கட்டுப்பாடான உறுதியான சக்தியாக இருக்கிறார்கள்.

இப்போராளிகள் நாட்டுப் புறங்களில் சுமார் நூறு இடங்களில் இயங்குகிறார்கள். வெடிமருந்துகளை தயாரிக்கிறார்கள். 1992ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதல் சுற்றில் இஸ்லாமிய முன்னணி வெற்றி பெற்றது.

இரண்டாது சுற்றிலும் வெற்றிபெற வாய்ப்பு இருந்த நேரத்தில் அல்ஜீரிய அதிபர் உடனே ராஜினாமா செய்து அரசை ராணுவத்திடம் ஒப்படைத்தார். அதிலிருந்து பல தீவிரவாத அமைப்புகள் ராணுவ ரீதியாக போராடத் துவங்கிவிட்டன. தேர்ந்தெடுக்கப்படாத இந்த அல்ஜீரிய அரசாங்கத்திற்கு முறையாக தேர்வு செய்து ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு வந்த மேற்கத்திய ரீதியில் ஆட்சிக்கு வந்த மேற்கத்திய அரசாங்கங்கள் பக்கபலமாக இருக்கின்றன.

www.tamilarangam.net

# வரலாற்றுப் பதிவுகள்

## செய்திச் சுருக்கம்

### இந்தியா

சென்ற ஆண்டில் மட்டும் டெல்லியில் 8500 விவகாரத்து வழக்குகள் போடப்பட்டு உள்ளன. சென்னையிலோ 1000 வழக்குகள்.

இந்தியாவில் சராசரியாக ஒரு நாளைக்கு 200 பேர் தற்கொலை செய்கின்றனர். படிப்பு அறிவுள்ள கேரளாவில் ஒரு இலட்சத்திற்கு 27,3 பேர் தற்கொலை செய்கின்றனர். படிப்பு குறைவுள்ள பீகார் மாநிலத்திலோ ஒரு இலட்சத்திற்கு 1,4 பேர் தற்கொலை செய்கின்றனர்.

உலகிலேயே பாண்டிச்சேரியில்தான் அதிக இனிப்பு நீர் வியாதி (Diabat) உள்ளது. இந்தியாவிலேயே ஒரு இலட்சத்ததிற்கு 70,5 ஆபர் பாண்டிச்சேரியில் மட்டும் தற்கொலை செய்கின்றனர்.

பழைய இந்திய கிரிக்கட் காப்டன் திலிப் வெங்கர்காரின் நலனுக்காக பம்பாயில் கிரிக்கட் போட்டி நடந்தது. அவருக்க 10 இலட்சம் ருபாய் அளிக்கப்பட்டது.

இந்திய பெருநகர வாசகர்கள் வெளிநாட்டுப் பத்திரிகை வெளியிடப்படுவதை வரவேற்று உள்ளனர். சமீபத்திய முதல் கருத்து கணிப்பின்படி கேட்கப்பட்ட 787 பேரில் 46 வீதம் பேர் வரவேற்றும் 41 வீதம் பேர் எதிர்த்தும் கருத்து தெரிவித்துள்ளனர்.

### அமெரிக்கா

அமெரிக்காவில் எந்த சிறுபான்மை இனத்தை விடவும் இந்தியர்களே அதிகமாக சம்பாதிக்கிறார்கள்.

அமெரிக்காவில் இந்தியர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்திற்கும் மேலுள்ளது.

### ஜேர்மனி

ஜேர்மனியில் அக்டோபர் 16ம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பழைய அதிபர் ஹெல்மட் ஹோல் வெற்றி பெற்றார். இது பல முன்னேறும் நாடுகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. காரணம் இவரது அரசாங்கத்தில் பெருளாதார உதவி அமைச்சகம் இருந்தது. அதன் மூலம் சென்ற ஆண்டில் மட்டும் 350 மில்லியன் டச்சு மார்க் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது. அதிபருக்கு எதிராக நின்றவர் இந்த அமைச்சகத்தை கலைத்துவிடுவதாக தேர்தல் பிரசாரத்தில் அறிவித்திருந்தார். அவரது பெயர் RUDOLF SCHARPING HADSTATED (உச்சரிப்புக்கு ஜேர்மனிய உடன்பிறப்புக்களை அணுகவும்)

### பொஸ்னியா

பொஸ்னிய விவாகரத்தில் அமெரிக்காவின் நிலை ஐரோப்பிய நாடுகளுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க சிஐஏ அதிகாரிகள் சிலர் சாதாரண உடைகளில் இஸ்லாமிய அரசுப்படைகளுக்ககு உதவ ஆரம்பித்துவிட்டனர். பொஸ்னிய முஸ்லிம்களுக்கு பொஸ்னிய செரிப்புகளுடன் எப்படி சண்டையிடவேண்டும் என கற்றுக் கொடுக்கிறார்கள். அமெரிக்கர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அவர்களின் உதவி அதி முக்கியமானது. உதாரணத்திற்கு செர்பியர்களின் இராணுவ தளங்களின் படங்களை சாட்டலைட் மூலம் அளித்தல்.

### புதிய செய்தி

பொஸ்னியாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. முன்னாள் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டரின் முயற்சியில் டிசம்பர் 23ம் தேதியிலிருந்து இது நடைமுறைக்கு வந்துவிட்டது. ஏற்கனவே செர்பியர்கள் நான்கு மாதம் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டிருந்தார்கள்.

### ஈராக்

நான்கு ஆண்டுகளாக ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரத்தடை இன்னும் நீக்கப்படவில்லை. அதனால் ஒரு காலத்தில் தொழில் நுட்பத்திலும், மருந்து தயாரிப்பதிலும் சிறந்து இருந்த ஈராக்கில் 2.5 கோடி மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகி உள்ளனர். உதாரணத்திற்கு மயக்க மருந்து இன்றியே அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. இடையில் குவைத்தை ஒரு நாடாக ஈராக் அங்கீகரித்து இருந்தாலும் நவம்பர் 14ம் தேதி அன்று ஐக்கிய நாடுகள் சபை தடையை நீக்கவில்லை. காரணங்களில் சதாம் ஹுசைன் தனக்கும் மேன்மக்களுக்கும் நூறுகோடி டாலர் செலவில் அரண்மனைகளை கட்டிவருவதாக அமெரிக்க அதிகாரிகளின் குற்றச்சாட்டும் அடங்கும்.

### பாலஸ்தீனம்

நவம்பர் 15 அன்று பாலஸ்தீனியர்களின் சுயாட்சி அதிகாரம் அதிகரிக்கும் வகையில் இஸ்ரேல் பிஎல்ஓ (PLO) விற்கு மேற்கு கரை நலன் மற்றும் சுற்றுலை துறை பொறுப்பை அளித்துள்ளது.

### பிரெஞ்சு ரெனோல்ட கம்பனி

ரெனோல்டின் ஒரு பகுதியை தனியார் துறைக்கு விடப்பட்டுள்ளது. பத்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அப்பங்குகளை வாங்கியுள்ளனர். நவம்பர் 10ம் திகதி முடிவுற்ற விற்பனையான மொத்த பங்குகள் 37 கோடி. ஒரு பங்கின் விலை 165 பிராங். ஆக மொத்தம், 37 X 165 = 6105 கோடி பிராங்.

### ரஷ்யா

பொதுவுடைமை கொள்கையின் வீழ்ச்சிக்கு பிறகு ரஷ்யக் குழந்தைகளை வெளிநாட்டவர் தத்தெடுப்பது பெருகி வருகிறது. 1993ம் ஆண்டில் மட்டும் 1600 குழந்தைகள் வெளிநாட்டவரால் தத்தெடுக்கப்பட்டது.

www.tamilarangam.net

## உரையாடல் வாசகர் வட்டம் பாண்டிச்சேரி உணவகத்தில்



**சர்வர்:** நீங்கள் முதன் முறையாக வந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு இது அன்பு டீ (கட்டணம் கிடையாது)

**சாப்பிட்டவர்:** அப்படி என்றால் அடுத்த முறை வரும் போது மீசையை எடுத்து விட்டு வர வேண்டியது தான். (உங்களுக்கு அடையாளம்தெரியாதே)

**ணண்பர்:** டேய் ஒரு ஓசி டீ க்காக மொட்டை அடித்துக் கூட வருவாய்

I: (பிரெஞ்சு தேர்தல்) போகிற போக்கைப் பார்த்தால் தொலோர் தான் வருவார் போலிருக்கிறது

II: ஆமாம் பலாதூருக்கும் சிராக்கிற்கும் நடக்கக்கூடிய போட்டியைப் பார்த்தால் தொலோருக்குத் தான் சான்ஸ் 'என்ன இருந்தாலும் பலதூர் அழகாக சிராக்கிற்கு வாய்ப்பளித்து விட்டு அடுத்த முறை ஜனாதிபதியாக நின்று இருந்தால் கண்டிப்பாக வந்துடுவார்'

பிரெஞ்சு அரசியல் பற்றிய நண்பன் இதழின் கட்டுரையைப் படித்த பின்பு

**மர்ஷெல்:** அலென் ஜுப்பே (Alain Juppe) தனது ஆதரவை இப்போது பலாதூருக்கு தெரிவித்து விட்டார்

I: அப்படியா? எப்போது?

**மார்சல்:** சென்ற ஞாயிறு 7 sur 7 நிகழ்ச்சியில் பேட்டி கண்டபோது Primaire நடத்ததுவதற்கு தனது ஆதரவை தெரிவித்து உள்ளார்.

II:அப்படியென்றால் என்ன அர்த்தம்?

பலதூருக்கு மறைமுகமாக தனது ஆதரவை அளிக்கிறார் என்றே பொருள்.

> பிரெஞ்சு தொலைக்காட்சியில் ஞாயிறு மாலையில் நடத்தப்படும் ஒரு நிகழ்ச்சிக்கு 7 sur 7 எனப்படும். இதற்கு 'வாரம் முழுவதும்' எனப்பொருள்.
> இந்த நிகழ்ச்சி பொது அறிவு ரீதியானது. கடந்த வாரம் முழுவதும் நடைபெற்ற உலக நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு பெரும் புள்ளியிடம் கருத்து கேட்கப்படும். இதை நடத்துபவர் அன்சன் கிளைர் என்ற பெண்.

Primaire என்றால் முதன்மை என்று பொருள். ஒரு அரசியல் கட்சியின் சார்பாக அதிபர் தேர்தலுக்கு போட்டியிட பலர் விரும்பலாம். அவர்கள் அனைவரும் போட்டியிட்டால் கட்சியின் ஓட்டு சிதறும் அல்லவா? எனவே ஜனாதிபதி தேர்தலுக்கு தனது சார்பாக ஒரே ஒருவரை தேர்ந்தெடுத்து தனது கொள்கையை நிலைநாட்ட ஒரு கட்சி விரும்புவது நியாயமானது. எனவே அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளரை தேர்ந்தெடுக்க தங்களுக்குள் ஒரு தேர்தலை வைக்கும். இது அந்த கட்சிகளின் உள் சட்டம். இதற்கு அமெரிக்க அரசியலில் Primary Election என்பார்கள். 'முதல் தேர்வு' என்பது அகராதிப் பொருள்.

இதே முறையை இந்த ஆண்டு பிரெஞ்சு அதிபர் தேர்தலில் பின்பற்றலாமா? என்ற கேள்வி எழும்போது RPR கட்சிக்குள்பின்பற்றலாம் என்று சொல்லும் கட்சிப் பிரமுகர்கள் பலதூருக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்றே பொருள். அதை விளக்குவதற்கு முன்னால் மற்றொரு கேள்வியும் எழுகிறது. அதாவது இந்த தேர்வு முறை நியாயமானதுதானே? இதை ஏன் கடைப்பிடிக்கக் கூடாது? என்று.

இந்த தேர்வு முறையை கட்சிக்குள் வைத்தால் நிச்சயம் சிராக் வரமுடியாது. இப்போதுள்ள நிலமையில் பலதூருக்கு பிரெஞ்சு மக்களின் ஆதரவு சிராக்கை விட அதிகம். அதோடு சோசலிசக் கட்சி சார்பில் போட்டியிட வாய்ப்பு உள்ள தொலோருக்கோ பலதூரை விட ஆதரவு அதிகம் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. எனவே வலுவான எதிரியை எதிர்கொள்ள தங்கள் கட்சியின் சார்பில் வலுவான ஆதரவுள்ள பலதூருக்கே உள் கட்சியில் ஓட்டு விழ வாய்ப்பு அதிகம். சிராக் கட்சித் தலைவராக இருந்தாலம்கூட, ஒரு கட்சியின் இலட்சியம் அதனுடைய அன்றைய தலைவரைவிட பெரிது. ஏனெனில் தலைவர் வருவார் போவார். ஆனால் கட்சியும் கொள்கையும் நீடிக்கும். எனவே, கட்சிக்குள் முதலில் தேர்தல் நடக்கட்டும். யார் வெல்கிறாரோ அவர் சிராக்காக இருந்தாலும் சரி, பலதூராக் இருந்தாலும் சரி அதிபர் தேர்தலில் போட்டியிடட்டும் எனகட்சிக்காரர் விரும்புவது நியாயமானது என்று தோன்றலாம்.

உண்மையில் தத்துவ ரீதியல் இந்த சித்தாந்தம் சரியே. ஆனால் நடைமுறையை பார்ப்போம். சிராக், கட்சியின் செல்வாக்குள்ள நீண்டகாலத் தலைவர். இரண்டு முறை ஏற்கனவே போட்டியிட்டு அனுபவம் பெற்றவர். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கூட்டணி பெற்ற மகத்தான வெற்றி, அவருக்கு மூன்றாம் முறை போட்டியிட ஒரு விருப்பத்தை கொடுத்தது மிகவும் இயல்பானது. 'நமது கட்சி பெரும் வெற்றி

பெற்றுவிட்டது. பலதூரே! உன்னை பிரதமராக ஆக்க நான் சிபாரிசு செய்கிறேன். ஒழுங்காக ஆட்சியை நடத்து. நம்ப பொடியன்கள் எல்லோருக்கும் மந்திரி பதவி கொடு. பசங்களா! நான் தான் தலைவன். நீங்கள் எல்லாம் அரசாங்கத்தை நடத்துங்கள். நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெல்கிறேன். பின்னர் அனைவரும் சேர்ந்து ஜமாய்த்து விடுவோம். தப்பித் தவறி எல்லையை மீறி, ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கலாம் என்ற ஆசையில் என்னோடு போட்டிபோட எண்ணாதீர்கள்' என்ற ரீதியில்தான் சிராக், பலதூரை பிரதமராகவே ஆக்கினார். அதோடு முதன்மைத் தேர்வு என்பது கட்சிக்குள் இல்லை என்ற நிலையே எப்போதும் இருந்தது. ஆனால் சிராக்கின்

www.tamilarangam.net

செல்வாக்கில் குளிர் காய்ந்த பலதூர் ஆரம்பத்தில் தன்னை தலைவருக்கு கட்டுப்பட்டவன் போல காட்டிக்கொண்டு இப்போது அதிபர் தேர்தலுக்கு தனது தலைவனோடு போட்டியிட ஆசைப்படுவது போல காட்டுவது ஒரு நம்பிக்கைத் துரோகம்.

அமெரிக்க, ஐரோப்பிய பத்திரிகைகளுக்கு எதையாவது ஒரு கருத்துக்கணிப்பை எடுத்துக் கொண்டே இருக்கவேண்டும். அரசியலில் என்று இல்லை, பல துறைகளிலும். எத்தனை முறை சுய இன்பம் அனுபவிக்கிறாய்? என்று தனி மனித அந்தரங்கத்தில் கூட கணக்கெடுத்து புள்ளி விபரம் போடுவது அவர்களின் அறிவு மிக்க நாகரீகம். (!)

இது டைம் போன்ற நாகரீகமான பத்திரிக்கைகளின் நிலை. மற்றப் பத்திரிக்கைகளைப் பற்றி சொல்லவா வேண்டும்?

அதே போன்று பலதூர் ஜனாதிபதியாக நின்றால் ஓட்டு போடுவீர்களா? என்று கருத்துக் கணிப்பு கேட்டு பலமுறை பத்திரிகைகள் அதை வெளியிட்டன. ஆரம்ப காலத்தில் பலதூருக்கு ஆகா, ஓகோ என்று அமோக ஆதரவு இருந்தது. பிறகு படிப்படியாக இறங்கி, ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது.

பலதூர் உண்மையில் நேர்மையகாக இருந்தால்,

பிரெஞ்சு மக்களே! என் மீதுள்ள மதிப்பிற்கு நன்றி. இந்த நிலைக்கு என்னை உயர்த்திய என் தலைவர் சிராக் இருக்கும் போது நான் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட மாட்டேன் என்றோ, சிராக்கையே தேர்ந்தெடுங்கள். நானும் பிரதமராக இருக்கும் போது உங்கள் விருப்பங்களை அவரிடம் பேசி ஆலோசனை கூறுகிறேன் என்று, சேர்ந்தோ பேசி இருந்தால் கட்சி மட்டத்தில் மதிப்புடன் இருந்த சிராக் மட்டுமே ஒரே போட்டியாளராக இருந்து இருப்பார்.

ஊமை ஊரைக் கெடுக்கும் என்பது போல இதற்கெல்லாம் பதிலளிக்காத பலதூர் இன்றுவரை தனது நிலையை சொல்லவில்லை. அல்லது கருத்துக்கணிப்புகள் அலை அலையாக வந்தபோது சிராக் பலதூரிடம் அவரது நிலையைப் பற்றி அறிக்கை விடச் சொல்லி இருக்கலாம். அவரும் சொல்லவில்லை. அது அவரது தவறு. பலதூரை நன்கு வளரவிட்டு அதோடு தொந்தரவுகளையும் வளர்த்துக் கொண்டார் சிராக்.

பலதூர் தான் நிற்கப் போவதில்லை என்று அறிவித்து, சிராக்கிற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தால் சிராக் வருவதற்கு வாய்ப்பு இருந்து இருக்கும். அது மட்டுமன்றி அடுத்த ஜனாதிபதியாக பிரெஞ்சு மக்கள் பலதூரை தேர்வு செய்ய வாய்ப்பும் இருந்திருக்கும்.

சிராக்கின் தவறால், பலதூரின் நன்றிகெட்ட தனத்தால் இருவருமே வெற்றி வாய்ப்பை இழந்து கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு லே மோன்ந் (Le Monde) தினசரியில் ஒரு கட்டுரையாளர் குறிப்பிட்டபடி பிரெஞ்சு மக்கள் சிராக்கை பாரீஸ் மாநகர மேயராகவே பார்க்கிறார்கள் என்ற கருத்து உண்மையாகிவிடும்.

**மரியதாஸ்:** அட நீங்க ஒன்னு!

அலென் ஜூப்பே! எப்பவோ Primaire கட்சிக்குள் வைக்கச் சொல்லிவிட்டார். போன வாரத்தில் மட்டும் அல்ல.

I: எப்போது?

**மரியதாஸ்:** எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் பிரான்சில் வைத்து சொல்லவில்லை. எங்கேயோ வெளிநாட்டிற்கு போனபோது அங்கு நடந்த பேட்டியில் அப்படிச் சொன்னார்.

**மரியதாஸ்:** மக்களிடம் சிராக்கிற்கு செல்வாக்கு இல்லை. தொலோருக்கு அதிகமாக இருக்கிறது. அதனால் தான் RPR கட்சி பயந்து பலதூரை விரும்புகிறது.

I: பலதூர் இந்த முறை விட்டுவிட்டு அடுத்த முறை நின்றால் வெற்றிபெறுவாரே!

**மரியதாஸ்:** யார் கண்டது. அதற்குள் அவரது பாப்புலாரிடி குறைந்தால் என்ன செய்வது.

## ஓடும் ரயிலில்.......

**வியட்னாமிய பெண்:** அப்படியா? புத்தர் இந்தியாவிலா பிறந்தார்?

I: ஆமாம்.

வியட்னாமிய பெண்: இந்தியாவில் புத்தர்கள் உள்ளனரா?

I: மிகவும் குறைவு. 1 வீதத்திற்கும் குறைவு.

**வியட்னாமிய பெண்:** அப்படியென்றால் இந்தியர்கள் தரித்திரம் பிடித்தவர்கள்.

I: இல்லை. தந்திரம் மிக்கவர்கள். புத்தரை கடவுள் அவதாரம் என்று சொல்லி அவரை முழுங்கி விட்டார்கள்.

**வியட்னாமிய பெண்:** புத்தர் எவ்வளவோ நல்லதைச் சொல்லியுள்ளாரே.

I: உண்மைதான். பல மதங்களும் அதே நன்மைகளைச் சொல்லி உள்ளன. ஆனால் புத்தருடைய நடைமுறையை யாரும் பின்பற்ற முடியாது. அவர் இரவு நேரத்தில் திடீரென சொல்லிக் கொள்ளாமல் மனைவி, மக்களை விட்டு விட்டுச் சென்றவர். உங்களுக்கு 4 பிள்ளைகள் என்று சொன்னீர்கள். உங்களது கணவர் புத்தரைப் போல விட்டுவிட்டுப் போனால் ஒத்துக் கொள்வீர்களா?

## ஆலோசனை கூடத்தில்......

**ஆலோசகர்:** ஜஹோவா கூட்டத்தாரின் கட்டுரைகளைப் போடாதீர்கள். அவர்களது முக்கிய நோக்கமே மதமாற்றம்தான். இதனால் சுவிட்சர்லாந்து நாட்டில் பெரிய பிரச்னை.

I: எதுவாக இருந்தால் என்ன? அவர்கள் வரட்டுமே. பேசிப் பார்த்து தெரிந்து கொள்ளலாமே.

**துரை இராஜலிங்கம்:** ஆமாம் ஆரம்பத்தில் நான் இந்துவாகத்தான் இருந்தேன். தற்போது கிறிஸ்தவ சமயத்தை ஆராய்ந்து வருகிறேன். ஜஹோவா பிரிவினரிடம்

www.tamilarangam.net

இருந்தேன். தற்போது கிறிஸ்தவ சமயத்தை ஆராய்ந்து வருகிறேன். ஜஹோவா பிரிவினரிடம் பாடம் கேட்டு வருகிறேன்.

I: அப்படியா?
**துரை:** ஆமாம் எனக்கு தெரிந்து பலர் மதம் மாறிவிட்டனர்.
I: எத்தனை பேர்?
**துரை:** ஒரு நூறு பேர் இருக்கும்.

## தொலை பேசியில்.......

I: எனக்கு உங்களை மிகவும் பிடித்திருக்கிறது. எதையும் தெளிவாகப் பேசுகிறீர்கள். விளக்கம் கேட்கிறீர்கள். புரிந்து கொள்கிறீர்கள்.
**நாஸ்திகர்:** ஆமாம் அறிவாளிகள் மற்ற விஷயங்களில் தூள் பரப்புவார்கள். ஆனால் மாட்டையும் பாம்பையும் கடவுள் என்று சொல்லி விடுவார்கள்.
என்ன ஒரு அறிவோ தெரியவில்லை.


மசாலா தோசை
சம்சார தோசை
ஐயர் தோசை
பரோட்டா
பிரியாணி

விசேடங்களுக்கான பெரிய ஓடர்கள்.
அன்பு டீ.

பாண்டிச்சேரி உணவகம்

3, rue Perdonnet,
75010 Paris
Tel: 40 37 01 49


# 10,000 பிராங் பரிசு

வரலாறு கலாச்சாரம், ராணுவம், சட்டம், செல்வாக்கு, கல்வி, பகுத்தறிவு, சமயம் சம்பந்தப்பட்ட 81 தலைப்புகளின் சிறு தொகுப்பு

## தலைசிறந்த தலைப்புகள்

என்ற புதிய நூல் நண்பனின் கைவண்ணத்தில் சிந்தனையில் மூன்று நாளில் எழுதப்பட்ட பெரும் உண்மைகளின் புதுமைத் தலைப்புகளின் சிறுதொகுப்பு. அறிவை விரிவாக்கும் புதிய தலைப்புகளை சிந்தனைக்கு அளிக்கும். புதிய தலைப்பு கண்டு பிடிப்போருக்கு ஒவ்வொரு தலைப்புக்கும் 10 பிராங் அன்பளிப்பு உண்டு.

நூலிற்கு இணையான 81 தலைப்புகளை வேறிடத்திலிருந்து எவரும் அளிப்பின் 10,000 பிராங் பரிசு உண்டு.

வாசகர் உமா கண்டு பிடித்த புதிய தலைப்பு அழியாத தலைவர். அவர் பெற்றது 10 பிராங். இந்த சலுகை மார்ச் மாத இறுதிவரை.

ஒருவர் எத்தனை தலைப்புகளையும் அளிக்கலாம். ஆனால் அதிகப் பட்சம் 3 வாக்கியங்களில் விளக்கம் தரவேண்டும். ஆசிரியருடைய முடிவே இறுதியானது.

நூலைப்பெற நண்பன் அலுவலகத்தோடு தொடர்புக கொள்ளவும்.

## புத்தக மதிப்புரை

இப்பகுதியில் தமது நூலை விமர்சிக்க விரும்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்பவும்.

– ஆசிரியர்

www.tamilarangam.net

# தொலை பேசி செய்தி
# டிசம்பர் 1994

காங்கிரஸ் கட்சி ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் படு தோல்வி அடைந்தது.

கர்நாடகத்தில் ஜனதா தளமும், ஆந்திராவில் தெலுங்கு தேசமும் வெற்றி பெற்றன.

கர்நாடக முதல்வராக தேவ கௌடா பதவி ஏற்றார்.

சர்க்கரை ஊழல் விசாரணை கமிஷனின் எதிரொலியாக மத்திய அமைச்சர் அந்தோணி இராஜினாமா செய்தார். மனசாட்சி இடம் தரவில்லை, முடிவில் மாற்றம் இல்லை என அறிவித்தார்.

தேர்தல் முடிவுக்குப் பின் நரசிம்மராவும் சோனியா காந்தியும் 45 நிமிடங்கள் சந்தித்துப் பேசினர்.

அதைவிட நீண்ட நேரம் அர்ஜுன் சிங்கும் சோனியா காந்தியும் சந்தித்துப் பேசினர்.

தஞ்சை மாவட்டம் நீடூரில் இஸ்லாமிய இலக்கிய மாநாடு டிசம்பர் 27, 28, 29 நாட்களில் நடைபெறும். விழாவில் அப்துஸ் ஸமது, அமைச்சர் கே.ஏ.கே.கிருஷ்ணசாமி பங்கு பெறுவர்.

முன்னாள் கிரிக்கெட் கேப்டன் கவாஸ்கரை பம்பாய் மாநகர ஷெரீப் ஆக கவர்னர் அலெக்ஸாண்டர் நியமனம் செய்துள்ளார்.

வி.பி. சிங். தனது பாராளுமன்ற பதவியை ராஜினாமா செய்தார். அதற்கு எந்தக் காரணமும் அவர் கூறவில்லை. அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அர்த்தமல்ல என்றும் குறிப்பிட்டார்.

நான்கு மாநிலத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெற்ற படுதோல்விக்கு பிறகு நரசிம்மராவின் செல்வாக்கு கணிசமாக குறைந்துவருகிறது. கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அமைச்சர் அர்ஜுன் சிங்கும் உத்தரபிரதேச காங்கிரஸ் கட்சியின் தலைவர் திவாரியும் கடுமையான முறையில் மோதிக்கொண்டனர்.

சோனியா காந்தியின் ஆதரவாளர்களில் ஒருவரான இளம் எம்.பி. விரைவில் சோனியா காந்தி நரசிம்மராவின் போக்கிற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவிப்பார் என கூறினார். மத்திய அமைச்சர் பிராணாப் முகர்ஜி சோனியா ஆதரவு எம்.பி.க்களோடு சமரச பேச்சு வார்த்தை நடத்தினார்.

www.tamilarangam.net




# அர்ச்சனா



# கலையரங்கம்

**Tel: 42 55 61 31**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கோல்டன் ஸ்டார்

# GOLDEN STAR

சிங்கப்பூர் உடைகள்
சிறந்தரக சாறிகள்
சேட்ஸ், ரவுசர்ஸ்
ஜீன்ஸ், ரீஷேட்ஸ்



பட்டு வேஸ்டிகள்
பட்டுப் புடவைகள்
பஞ்சாபி உடைகள்
கவுண்கள்

22 காரட் தங்க நகைகள்
கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள்
எவர் சில்வர், பித்தளைப் பொருட்கள்
பட்டுச் சேலைகள், பட்டு வேட்டி-சால்வைகள்
கல்குலேட்டர்கள், றைஸ் குக்கர்கள்
அலங்காரப் பொருட்கள், கவரிங் நகைகள்
பாட்டு கசட்டுகள், CD

199, Rue du Fg Saint Denis
75010 PARIS
Mo: Gare du Nord ou La Chapelle

Tel: 42 09 26 50 ou 42 07 26 44
Fax: 40 05 94 87

www.tamilarangam.net

அனைவருக்கும் GOGEST நத்தார், புதுவருட புதுவருட வாழ்த்துக்கள்

"அன்பான வரவேற்பு - துரிதமான தரமான சேவை - நியாயமான கட்டணம்"
இவற்றை நாம் சொல்லவில்லை. எம்மிடம் வருபவர்கள் சொல்கிறார்கள்.

**COGEST, à suivre .....**


**CONSEIL GESTION DES ENTREPRISES ET SERVICE TRADUCTION**




**SECTION A**
**வர்த்தக நிறுவனங்களின் முகாமை**
- வியாபார நிறுவனங்களின் உருவாக்கம்
- வருடாந்த முகாமை செயல்பாடுகள்
- நிறுவன வளர்ச்சிக்கான முகாமை ரீதியிலான ஆய்வுகள்
- ஏனைய வர்த்தக ரீதியிலான ஆலோசனைகள்



**SECTION B**
**துரித மொழிபெயர்ப்பு சேவை**
- பிறப்பு இறப்பு சான்றிதழ்கள்
- திருமண பதிவுப்பத்திரங்கள்
- அரச அலுவலக ஆவணங்கள்
- ஏனைய பத்திரங்கள்



**SECTION C**
**கணனிமூல சொல் தொகுப்பு**
- அரச அலுவலக கடிதங்கள்
- தொழில் தேடுவதற்கான கடிதங்கள்,CV
- ஏனைய அனைத்து சொல்தொகுப்பு வேலைகள்



**SECTION D**
**கல்விச்சேவை**
- கணக்கியல்
- முகாமை
- கணனியியல்(Dos,OS/2,Windows,Access)
- பிரெஞ்சு (Lu, parlé et écrit)



**SECTION E**
**ஆலோசனை**
- கணக்கியல்
- தொழில் பிரச்சனைகள்
- வர்த்தக முகாமை



**SECTION F**
**கணனியியல்**
- கணனி வாங்குதல்
- FAX மற்றும் Network அமைத்தல்
- வியாபார நிறுவனத்திற்கு ஏற்ற கணனி அமைப்புகள்

**COGEST**
**RESPONSABLE:**
**S.NANTHACUMAR**

**21, Bd de la Chapelle**
**75010 Paris**

**Tél: (1) 42 09 13 99**
**Fax: (1) 42 09 14 05**

**உங்கள் கவனத்திற்கு:**
எமது நிறுவனத்திற்கு கிளைகள் எதுவும் இல்லை. எமது அலுவலகம் மேற்குறிப்பிட்ட முகவரியில் மட்டும்தான் அமைந்துள்ளது.
எமது சேவைகளுக்கு நீங்கள் செலுத்தும் கட்டணத்திற்கு பற்றுச்சீட்டு (TVA உட்பட) வழங்கப்படும்.

COGEST ARTS©

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்